## 1

இன்னும் ஐந்தே ஐந்து நிமிடம்தான் இருக்கிறது.

அந்த பரபரப்பான நேரத்திலும் செண்பகவல்லியின் ஞாபகம் வந்தது.

வேகவேகமாய் நடந்தேன்.

ஓடு என்றது மூளை.



# காதல் தீ



மதுரா

நடுரோட்டில் பெட்டியை தூக்கிக்கொண்டு ஓட வெட்கமாக
க்தது.
என்னை இடித்துக்கொண்டு ஒரு பெண் ஓடினாள்.
அதுவும் சேலை கட்டிய பெண்.
எனக்கு வெட்கமாய் போய்விட்டது.
நானும் பெட்டியை தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தேன்.
று அடி ஓடுவதற்குள் மூச்சு வாங்கியது.
காமராஜர் கண் இமைக்காமல்– சிலையாக நின்று கொண்டிருந்தார்
ரமாய்.
ன் முன்னால் ஓடிக்கொண்டிருந்த பெண் காணாமல்
யிருந்தாள்.
இதயத்தை இறுக்கி பிடித்துக்கொண்டு இன்னும் வேகமாய்
னேன்.
டி வா... சோம்பேறி' என்று வரவேற்றது, திருநெல்வேலி ரெயில்
யம்.
ருச்செந்தூர் கோவிலில் குழுமியிருக்கும் பக்தர்கள் போல
ம்.
ாரையும் பொருட்படுத்தாமல் ஓடினேன்.
யணிகள் கவனிக்கவும்..." என்று ஒலிபெருக்கியில் இனிமையாய்
த்தைத் திருப்பினார்கள்.
கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் தயாராய் நின்றது... சென்னை
ட–
டென்று பிளாட்பாரத்தில் இருந்து தண்டவாளத்தில்
தேன்.
டுத்த முப்பதாவது விநாடியில் ரெயில் அருகே இருந்தேன்.
வசரமாய் 'பேண்ட் பாக்கெட்'டை துழாவி டிக்கெட்டை எடுத்துப்
தேன்.
4– 18 MB"
தடுகள் ஒரு முறை முணுமுணுத்துக்கொண்டன.
கள் நான்காவது பெட்டியைத் தேடின.
ல்கள் பரபரப்பாய் ஓடின.
யில் மெல்ல நகரத் தொடங்கியது.
பெண் என்னை இடித்துக்கொண்டு ஓடினாள்.



'அந்த பெண்... அந்த பெண்... ரோட்டில் இடித்த பெண் போலவே இருக்கிறதே?'

– சிந்தனையை உதறிவிட்டு என்னுடைய 'கம்பார்ட்மெண்டை' தேடி ஓடினேன்.

S 4 பெட்டி கண்ணில் பட்டது. அவசர அவசரமாய் ஏறிக்கொண்டேன், கைப்பெட்டியுடன்.

பதினெட்டை தேடி அமர்ந்தேன்.

ரெயில் வேகமெடுத்து ஓடியது.

சிறிது நேரம் கழிந்தது.

'டிக்கெட்' பரிசோதகர் வந்துவிட்டுப் போனார், புன்னகையுடன்.

வருகிறவர்கள் வந்து சேராததால் இரண்டு இருக்கைகள் வெறுமையாய் கிடந்தன.

ரெயிலின் வேகத்தில் மரங்கள் பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்தன.

வாஞ்சி மணியாச்சி நிலையமும் ஓடியது, மரங்களுடன்.

மீண்டும் செண்பகவல்லியின் அழகு முகம் கண்முன் வந்தது.

எந்த சுவாரசியமும் இல்லாமல் நேரம் நகர்ந்தது.

கோவில்பட்டிக்கு வந்து சேர்ந்திருந்தது ரெயில்.

இட்லி, பூரி, தோசை எல்லாம் தேடி வந்தன.

அதே நேரம்–

ஆபத்தும் என்னை நாடி வந்தது... கறுப்புச்சேலை கட்டிக்கொண்டு. கையில் கறுப்புப் பெட்டியும் இருந்தது.

அந்த பதினெட்டு–

என் அருகில் வந்து அமர்ந்தாள்.

எனது பதினெட்டும் அதாவது இருக்கையும், அந்த பதினெட்டு வயதும் தொட்டுக்கொண்டன.

என் இதயத்தில் காதல் தீ பற்றிக்கொண்டது.

"சார்..."

– குயிலாய் அழைத்தது, அந்த மயில்.

அகல விழிகளைப் பார்த்தேன்... விழுந்துவிடாமல்.

"என் பெயர் நதிரா."

– நதியின் குளிர்ச்சியை கண்களில் உணர்ந்தேன்.

"உங்களைப் பார்த்தால்..."

"இளிச்சவாயனாய் தெரிகிறதா?"

"போங்க சார்."

– சிணுங்கினாள் அந்த அழகி.

"போகத்தான் போகிறேன், சென்னைக்கு."

"இதென்ன மச்சான்ஸ் விளையாட்டு."

– மீண்டும் சிணுங்கினாள், வெட்கத்துடன்.

காதல் தீ பரவத் தொடங்கியது.

"எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்."

– நிமிர்ந்து உட்கார்ந்தேன், சுவாரசியத்துடன்.

"ஒரு கம்பெனியில் வேலைக்கு 'இண்டர்வியூ'. சென்னைக்கு போகிறேன். வருகிற அவசரத்தில் 'டிக்கெட்'டை எடுத்துவர மறந்துவிட்டேன். என்ன செய்வதென்று தெரியவில்லை. நீங்கள்தான் எப்படியாவது..."

– அவள் உதடுகள் அசைவது கவிதை படிப்பது போல் இருந்தது.

அடுத்த விநாடியே எழுந்துகொண்டேன்.

'டிக்கெட்' பரிசோதகரை தேடிப் போனேன்...

வெற்றியோடு திரும்பினேன்.

"நன்றி... நன்றி..."

– ஆயிரம் முறை சொன்னாள், வார்த்தைகளால்.

மதுரையை தொடுவதற்குள் இன்னும் நெருக்கமாகி இருந்தோம்.

விஜயகுமார் என்ற எனது பெயர் விஜய் என்று சுருங்கியது.

காதல் தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

இடையில் ஒரு முறை செண்பகவல்லி வந்துவிட்டுப் போனாள், நினைவில்.

"நதி... நதி."

– பேசிக்கொண்டே இருந்தேன்... வாய் மூடாமல்.

மதுரையைத் தொட்டதும் மதுரை மல்லி போல இட்லியும், கோவில்பட்டி கடலை மிட்டாயும், சாத்தூர் போளியும் சாப்பிட்டோம்... ஆயிரம் கதைகள் பேசிக்கொண்டே.

உறக்கம் வந்தது.

உறக்கத்தை துரத்த முகம் கழுவப் போனேன்.

திரும்ப வந்தவன் அதிர்ந்தேன்.



நதிராவைக் காணவில்லை.

நான் இருந்த இருக்கையில்–

மடிக்கப்பட்ட காகிதம் ஒன்று இருந்தது.

'நதிரா எதாவது...'

காகிதத்தை எடுத்தன்.

உறக்கம் கலைத்தேன்.

கிறுக்கலாய் ஓடியிருந்தன... கறுப்பு எழுத்துகள்.

'இரக்கம் காட்டி இறந்துவிடாதே.

காதல் தீயில் கருகிவிடாதே

மனம் ஒரு குரங்கு

இன்று உறங்கு

நாளை இறங்கு.'

– மிரட்டின அந்த கறுப்பு எழுத்துகள்.

அந்த நிமிடமே காதல் தீ அணைந்து போயிருந்தது.

எங்கிருந்தோ பெட்டியுடன் வந்தாள் நதிரா.

"எங்கே போய்விட்டு வருகிறாய்...?"

"அது இருக்கட்டும்... கையில் என்ன காகிதம்...?"

"கவிதை... கவிதை..."

"காதல் கவிதையா...?"

"ம்..."

– அவசரமாய் காகிதத்தை சட்டைப் பைக்குள் திணித்தேன்.

"எனக்கு தூக்கம் வருகிறது."

– என்றாள் நதிரா, அழகாய் நெளித்து.

"எனக்கு தூக்கம் வராது."

"ஏன்...?"

"அழகான பெண் அருகில் இருந்தால் எப்படி தூக்கம் வரும்?"

"நான் அழகாய் இருக்கிறேனா...?"

– ஆறு அங்குல நெருக்கத்தில் அந்த கேள்வியை கேட்டாள் நதிரா.

மீண்டும் காதல் தீ பலமாய் பற்றிக்கொண்டது.

"நான் கீழே. நீங்கள் மேலே."

– படுத்துக்கொண்டாள், அவசரமாய்.

'மேலே மேலே போய்விடக்கூடாது.'

– என்றது என் மனம்.

அவசரமாய் படுக்கையில் ஏறி படுத்துக்கொண்டேன்.

"விஜய் சார்."

"ம்."

"கனவில் வந்தால் துரத்தமாட்டீர்களா...?"

"தூக்கம் வந்தால்தானே கனவு வரும்?"

– சட்டைப் பைக்குள் இருந்த காகிதம் கனத்துக் கிடந்தது.

'யார் இதை எழுதி இருப்பார்கள்?

நதிராவுக்கு பின்னாலிருக்கும் எதிரி யார்?

எதற்காக என்னை மிரட்டுகிறான்?'

– பயத்துடன் தூங்கிப் போனேன்.

கனவில் நதிரா வந்தாள்.

கையிலோ கத்தி இருந்தது.

## 2

விழித்துப் பார்த்தபோது விடிந்து போயிருந்தது.

என்னை தொட்டு அசைத்துக்கொண்டு இருந்தாள் நதிரா.

சென்னை எழும்பூரை தொட்டிருந்தது ரெயில்.

பதற்றமாய் எழுந்துகொண்டேன்.

சட்டைப் பைக்குள் இருந்த காகிதம் பயமுறுத்த–

அவசர அவசரமாய் பெட்டியை தூக்கிக்கொண்டு ரெயிலில் இருந்து இறங்கினேன்.

இறங்கின வேகத்தில் நடக்க ஆரம்பித்தேன்... ஓட்டம் போல.

சில நிமிடங்களில் ரெயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்திருந்தேன்.

எனக்காக நிற்பது போல் ஆட்டோ ஒன்று காத்து நின்றது.

ஆட்டோவில் ஏறி அமர்ந்தேன்.

"சென்டிரல்ல எதாவது லாட்ஜுக்கு போப்பா."

யாரோ தோள் தொட திரும்பினேன்.



கையில் கறுப்பு பெட்டியுடன் நின்றுகொண்டிருந்தாள் நதிரா.

நான் வாய் திறப்பதற்குள்–

ஆட்டோவில் ஏறி அருகில் அமர்ந்துகொண்டாள்.

ஆட்டோ அவசரமாய் புறப்பட்டது.

"நானும் உங்களுடன் தங்கிக்கொள்கிறேன்."

– என்றாள், என்னை இடித்து அமர்ந்தபடி.

ஆட்டோ பள்ளத்தில் விழுந்து எழுந்து ஓடியது.

இருவரும் மோதிக்கொண்டோம்... இன்பமாய்.

இதயம் எந்த மறுப்பும் சொல்லவில்லை.

அவள் எதோ பேசிக்கொண்டே வந்தாள்.

நானோ காதல் தீயை விழுங்கிக்கொண்டிருந்தேன்... நெருப்புக் கோழியாய்.

எதோ ஒரு லாட்ஜ் முன்னால் போய் ஆட்டோ நின்றது.

காதலி போல என்னோடு இறங்கி வந்தாள்.

லாட்ஜ் வரவேற்பில் ஒரு கிழவர் அமர்ந்திருந்தார்.

இருவரையும் சந்தேகமாய் பார்த்தார்.

"இரண்டு சிங்கிள் ரூம்."

"அட்ரஸ்."

"23, வடக்கு ரத வீதி, திருநெல்வேலி."

"24, வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண்."

– என்றாள், உரசிக்கொண்டு நின்ற நதிரா.

'அடப்பாவி... என் பக்கத்து வீடு என்று பொய் சொல்கிறாளே?'

– அலட்சியமாய் பெட்டியை தூக்கிக்கொண்டு முன்னால் நடந்தாள் நதிரா.

தயக்கத்துடன் பின்னால் நடந்தேன், சற்று பயத்துடன்.

அருகருகே இருவருக்கும் அறை ஒதுக்கப்பட்டது.

"நதிரா... உனக்கு 'இண்டர்வியூ' இருக்கே?"

"நாளைக்குத்தான்."

– அவசரமாய் அறைக்குள் நுழைந்து–

கதவை பூட்டிக்கொண்டேன்.

## 3

பேண்டைவிட்டு லுங்கிக்கு மாறியிருந்தேன்.

கதவு பலமாய் தட்டப்பட்டது.

அவசரமாய் திறந்தேன்.

நதிரா நின்றுகொண்டிருந்தாள்.

"பூட்டு இருக்கிறது. சாவி இல்லை."

– என்றாள், கண்களில் கவலையுடன்.

அவள் பேசுவது எனக்கு புரியவில்லை.

"சாவியைத் தொலைத்துவிட்டேன். பெட்டியை திறக்க முடியவில்லை. குளித்துவிட்டு உடை மாற்ற வேண்டும்."

"என்னிடம் சேலை ஏது...?"

"உங்கள் லுங்கி, சட்டையை கொடுத்தால் என்னவாம்...?"

"நீ என்னை என்னதான் செய்யப் போகிறாயோ...?"

– கட்டம் போட்ட சட்டை ஒன்றையும், லுங்கியையும் எடுத்து கொடுத்தேன்.

வாங்கிக்கொண்டு நடந்தாள்... குலுங்கிக்கொண்டு.

மீண்டும் கதவை பூட்டிக்கொண்டேன்.

'யார் இந்த நதிரா?

எதற்காக என்னோடு ஒட்டுகிறாள்.

மிரட்டல் கடிதம் எழுதியது யார்?

ஆபத்தை நான் விலை கொடுத்து வாங்குகிறேனா?'

– இதயத்துக்குள் குதித்தன கேள்விகள்.

'நதிரா... உண்மையிலேயே நீ யார்? எதற்காக ரெயிலில் என் அருகில் வந்து அமர்ந்தாய்? உன்னுடன் பேச– எச்சரிக்கை தருவது யார்? எதற்காக என்னோடு லாட்ஜுக்கு வந்தாய்?'

– உடனே பதில் வேண்டும் என்றது இதயம்.

அறையைவிட்டு வெளியேறினேன் அவசரமாய்.

நதிரா அறையின் கதவை தொட்டேன். திறந்துகொண்டது.

நதிரா லுங்கி– சட்டையில் நின்றிருந்தாள்.

அழகாய்... மிக அழகாய் இருந்தாள்.



கறுப்பு சூட்கேசை தூக்கி என்னிடம் காட்டினாள்.
சிறிய பூட்டொன்று ஆடியது.

"சாவி?"

– சிணுங்கினாள் நதிரா.

"திறந்துவிடலாம்."

– என்றேன், அவளை அதிகம் ரசித்துக்கொண்டே.

"நதிரா நீ?"

"எல்லாம் சொல்கிறேன். அறையில் இருங்கள் வருகிறேன்."

– என்றாள், ஒரு கண்ணை மூடித் திறந்து...

## 4

கொஞ்ச நேரம் அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டேன்.

அந்த காகிதம் காற்றில் படபடத்தது.

அது பறந்துவிடாமல் கத்தி அழுத்திக்கொண்டு இருந்தது.

அறைக்குள் நுழைய காலெடுத்து வைத்தவன்–

சட்டென்று நின்றேன்.

வேகமாய் 'பால்கனி'க்கு ஓடினேன்.

வெளியே எட்டிப் பார்த்தேன்.

ஆட்டோ ஒன்று ஆட்களை உதிர்த்துவிட்டு போனது.

ஒரு ஆள் சிரமமாய் எவர்சில்வர் பாத்திரங்களை சுமந்து போனான். தபால் அலுவலக சிவப்பு வண்டி தத்தி தத்தி கடந்து போனது.

ஓர் அழகான இளம்பெண், மஞ்சள் பனியனில் குலுங்கி குலுங்கி நடந்து போனாள். ரிக்ஷாக்காரனிடம் பேரம் நடந்தது. சுவரிலிருந்த போஸ்டரை மாடு ஒன்று கடித்துக்கொண்டிருந்தது. யாரும்... யாரும் வித்தியாசமாய் தெரியவில்லை.

'துணிச்சலாய் என் அறைக்குள் வந்தது யார்?'

– சோர்வுடன் அறைக்குத் திரும்பினேன்.

இன்னும் அந்த காகிதம் படபடத்துக் கொண்டுதான் இருந்தது.

கையில் எடுத்தேன்.

விரல்கள் மெலிதாக நடுங்கின.

ரத்தச் சிவப்பில் எழுத்துக்கள்.

'அபாயம்' என்று சொல்லாமல் சொன்னது.

'இன்று இரவு எட்டு மணிக்குள்

அறையை காலி செய்துவிட்டு–

தொலை தூரம் சென்றுவிடுகிறாய்!

உயிர் என்பது விலை மதிக்க முடியாத ஒன்று.

அப்படித்தானே நண்பா?'

– என்று கேள்வி கேட்டது அந்தக் காகிதம்.

வார்த்தைகளுக்குள் மறைந்திருந்தது மிரட்டல்.

இந்த இடத்தைவிட்டு ஓடிப் போய்விடு என்று மறைமுகமாக எச்சரித்தது கத்தி.

'இந்த காகிதத்தின் நோக்கம் என்ன? நதிராவை தனிமைப்படுத்தி... தெரியவில்லை. அவளும் வாய் திறக்க மறுக்கிறாள். 'ம்' காத்திருப்போம்.'

– ஒரு முடிவுக்கு வந்தவனாய் காகிதத்தை கசக்கி அறையின் மூலையில் எறிந்தேன்.

அந்த மினுக்கும் கத்தியை கையில் எடுத்துப் பார்த்தேன்.

'என்னைத் தொட்டால் ரத்தம் பிறப்பிப்பேன்' என்று பயமுறுத்திற்று.

காலடி ஓசையில் திரும்பிப் பார்த்தேன்.

"விஜய் சார்."

– அழைத்தது நதிராவின் குரல்.

மின்னல் வேகத்தில் பெட்டியை திறந்து...

துணி மடிப்புகளுக்கு இடையில் அவசர அவசரமாய் கத்தியை மறைத்தேன்.

கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்திருந்தாள் நதிரா.

"என்ன சார்? எதையாவது ஒளிச்சி வைக்கிறீங்களா?"

– திரும்பி நதிராவைப் பார்த்து சிரித்தேன்.

எதையோ தேடுவது போல் தேடி, சீட்டுக்கட்டை கையில் எடுத்துக்கொண்டேன்.

"அங்கே போகலாமா?"

"ஓ..."



– என்றாள், சிரிப்பு மாறாமல்.

தன்னைச் சுற்றி நடப்பது எதுவுமே தெரியாது என்பது போல் அப்பாவிச் சிரிப்பு.

'கத்தி– கடித மிரட்டல் பற்றி இவளிடம் சொல்லிவிடுவோமா?'

'வேண்டாம்! அவளாக வாய் திறக்கட்டும்.'

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த சிந்தனை?"

"ஒன்றுமில்லை."

– புன்னகையுடன் எழுந்துகொண்டேன்.

கதவை இழுத்துப் பூட்டினேன்.

அடுத்திருந்த நதிராவின் அறைக்குச் சென்றோம். படுக்கையில் அவள் முகம் பார்த்து அமர்ந்துகொண்டேன்.

"உனக்கு என்ன விளையாட்டு தெரியும்?"

"அனைத்தும் அறிவோம்"– என்றாள், வேடிக்கையாய்.

"ஜெஸ் கார்ட்?"

"ஜெஸ் கார்டா!?"

"நான் சொல்லித் தர்றேன்."

– வழுவழுப்பான சீட்டுகளை உறையிலிருந்து விடுதலை செய்து, படுக்கையில் பரப்பினேன்.

நதிரா சற்று குனிந்து அமர்ந்திருந்தாள்.

இளமை இதமாய் எட்டிப் பார்த்தது.

"ம்... ஆரம்பிங்க"– என்றாள், சிணுங்கலாய்.

என் கவனம் திசை திரும்பும் சாத்தியக்கூறுகள் அதிகரித்தன.

"நான் இப்போ ஜெஸ் கார்ட் சொல்லித்தரப் போறேன்.

இந்த நிமி த்தில் இருந்து நான் குரு. நீ?"

"சிஷ்யை."

"சரி. எனக்கு குருதட்சணையாய் என்ன தரப்போறே?"

"இப்ப சொல்லமாட்டேன். முடிந்ததும் ஒண்ணு இல்ல ரெண்டு தர்றேன்"– என்று சொல்லிவிட்டு, குலுங்கலாய் சிரிக்க–

எனக்கு மயக்கம் தந்தது.

அவள் சட்டையின் சிறைப்படுத்தப்படாத முதல் 'பட்டன்' தொடர்ந்து சங்கடப்படுத்தியது.

"கண்டிப்பா தரணும். விளையாட்டு முடிஞ்சதும் தரமாட்டேன்னு சொல்லிடக் கூடாது."

"அந்தப் பயம் வேண்டாம் வாத்தியாரே. நதிரா வாக்கு மாறமாட்டா. தருவா... கண்டிப்பா தருவா. போதுமா?"

"சரி. அதுக்கு முன்னால இன்னொரு வேண்டுகோள்."

"என்ன?"

"அந்த முதல் பட்டனை மூடிட்டா நல்லது. என்னை ரொம்ப சங்கடப்படுத்துது."

-வெட்கத்துடன் குனிந்து அந்த பட்டனை சிறைப்படுத்தினாள்.

"ம்..."- என்றாள், மெதுவாய்.

விளையாட்டு ஆரம்பமானது.

ஐந்து நிமிடத்தில் விளையாட்டை புரிந்துகொண்டு என்னையே மடக்கினாள்.

கொஞ்ச நேரம் விளையாடினோம்.

அது போரடிக்க- அடுத்தது... இடை இடையே 'ஜோக்'கடித்தேன்.

சில நேரம் குலுங்கிச் சிரித்தாள். சில வேளை குலுங்காமல்...

ஓரிரு முறை 'மோசம்' என்றாள்.

கடைசியில்-

"பசிக்குது"- என்றாள், சோர்வுடன்.

அழைப்புக்கு- பையன் ஓடோடி வந்தான்.

சாப்பாடு என்றதும் அவசரம் காட்டினாள். வேகமாய் வெளியேறினான்.

பதினைந்து நிமிட இடைவெளியில் சீட்டுக்கட்டில் நிறைய 'ட்ரிக்ஸ்' காட்டினேன்.

பையன் டிபன் தட்டுகளோடு வந்தான். மவுனமாய் சாப்பிட்டோம்.

சிறு குழந்தையாய் தண்ணீர் குடித்தாள்.

தண்ணீர் சிந்தி- சட்டையை நனைத்தது.

நனைந்த பகுதி உடம்போடு உடம்பாய் ஒட்டிக்கொண்டு இம்சைப்படுத்திற்று- எதிரே இருந்த என்னை.

"சரி, வர்றேன்"- என்று எழுந்துகொண்டேன்.

---

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.



"அதற்குள்ளாகவா?"

- குரலில் வியப்பு காட்டினாள்.

"உறக்கம் வருது."

"நேற்று ரெயிலில் உறங்கவில்லை...?"

"பக்கத்தில் ஒரு அழகான பெண்ணை வைத்துக்கொண்டு எப்படி தூங்க முடியும்?"

நான் கேட்க- இனிப்பு தடவிய குரலில் சிரித்தாள்.

"நான் ரொம்ப அழகா?"

- பார்வையில் ஈர்ப்பு இருந்தது.

என்னால் அந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியவில்லை.

"ம்... பதில் சொல்லுங்க. நான் ரொம்ப அழகா?"

"யார் மறுக்க முடியும். நீங்க அழகுதான். எனக்கு தர வேண்டியதை கொடுத்துடுங்க. நான் போகட்டும்."

"தரவேண்டியதா... என்ன தரவேண்டும்?"

"அதற்குள் மறந்தாச்சா. குருதட்சணை."

"தருவேன். நிச்சயம் தருவேன். மாலை மயங்கட்டும். இரவு திரும்பட்டும்"- என்றாள், வசன நடையில்.

"சரி. ஒரு குட்டித் தூக்கம் போட்டுட்டு வர்றேன். நீங்களும்..."

"குட்டி தூக்கம் போடுறேன்"- என்று நதிரா சொல்ல, புன்னகையுடன் வெளியேறி என் அறைக்குள் புகுந்தேன்.

அவசரமாய் கதவை மூடினேன்.

வேகமாய் என் பெட்டியைத் திறந்தேன்.

கத்தியை எடுத்து நிதானமாய் திருப்பி திருப்பி பார்த்தேன்.

மீண்டும் பெட்டியில்- அடியில் வைத்து மூடினேன்.

'இரவு எட்டு மணி. எச்சரிக்கை. அழகான நதிரா.'

– கையசைத்துவிட்டு படுக்கையில் சரிந்தேன்.

1, 2, 3, 4– இப்படியெல்லாம் எண்ணாமல் அவசரமாய் தூங்கிப் போனேன்.

நிறைய கனவுகள்.

நதிரா பறப்பது, நதிரா சிரிப்பது, நதிரா குளிப்பது- விளம்பரப் படங்கள் போல துண்டு துண்டாய் வந்தன.

விழித்துக்கொண்டேன்.

பக்கத்திலிருந்த கடிகாரத்தைப் பார்த்தேன்.

'இத்தனை நேரம் தூங்கி இருக்கிறேனே?'

– ஆச்சரியமாக இருந்தது.

அலை அலையாய் வந்த கனவுகளை நினைவுக்கு கொண்டுவந்தேன். வர மறுத்தது. கனவுகளை ஓரம் தள்ளிவிட்டு எழுந்து முகம் கழுவினேன்.

'அந்தப் பெட்டியின் சின்ன பூட்டுக்கு ஒரு சாவி வாங்க வேண்டும்.'

– சிந்தனையுடன் அறையைப் பூட்டிவிட்டு வெளியே வந்தேன்.

திரும்பிப் பார்த்தேன்.

நதிராவின் அறை அமைதியாய் இருந்தது.

'இன்னும் உறங்கிக்கொண்டுதான் இருப்பாள். சாவி துவாரம் வழியாக எட்டிப் பார்க்கலாமா? ச்சே...! அநாகரீகம்.'

– படிகளில் வேகமாய் இறங்கினேன்.

முன்னால் தூங்கிக்கொண்டிருந்த கிழவனை காணவில்லை.

இருபது வயது இளம்பெண்ணொருத்தி அமர்ந்திருந்தாள்.

மாலை பத்திரிகையை மேசையில் பரப்பி– தேர்வுக்கு படிப்பது போல் படித்துக்கொண்டிருந்தாள். சத்தம் ஏற்படுத்தி, சாவியை வைத்தேன். பத்திரிகையில் இருந்து கண்களை நகர்த்தாமலே சாவியை எடுத்துக்கொண்டாள். சாலையில் நடந்தேன்.

வால்டாக்ஸ் ரோட்டில் வந்து நின்று ஓரங்களை ஆராய்ந்தேன்.

'சாவி மன்னர்'களை காணவில்லை.

பக்கத்து பெட்டிக்கடை ஒன்றை நெருங்கி–

"சாவி"– என்று ஆரம்பித்தேன்.

"அந்தண்டை போப்பா"– என்றான் பெட்டிக்கடைக்காரன் எரிச்சலில்.

நகர்ந்தேன். பக்கத்து தேவாலயம் பளிச்சிட்டது.

கொஞ்சம் அப்படியே நடந்தேன். என் எதிர்பார்ப்பு கண்ணில் பட்டது.

சாலையோரம் நிறைய பூட்டு, சாவிகளுடன் அமர்ந்திருந்தான் ஒருவன். அவனிடம் சென்று கண்டிப்பாக திறக்கும் என்ற உத்திரவாதத்துடன் இரண்டு சாவிகள் வாங்கினேன். 'திறக்குமா?' என்ற சந்தேகத்துடன் திரும்பி நடந்தேன்.

ரிக்ஷாகாரார்கள் சவாரி கிடைக்காமல் புகைத்துக்கொண்டிருந்தனர்.



இரண்டு போலீஸ்காரர்கள் யாரையோ புகழ்ந்துகொண்டிருந்தார்கள்.

பூந்தமல்லி நெடுஞ்சாலையைத் தொட்டேன். கொஞ்ச நேரம் போக்குவரத்தை வேடிக்கைப் பார்த்தேன். மேலை வானத்தில் சூரியனின் ஒளி திட்டுகள் கொஞ்சம் மீதமிருந்தது.

'சப்வே'க்குள் நுழைந்து எதிர்பக்கம் போகலாமா என்று நினைத்தவன், வேண்டாமென்று தீர்மானித்து– தங்கசாலை ஆரம்பத்தைத் தொட்டு உள்பக்கமே திரும்பி நடந்தேன். விநாயகர் கோவில் கண்ணில்பட்டது.

உள்ளே நுழைந்தேன். ஒருவித நறுமணம் என்னைத் தொட– தெய்வ சிந்தனை வந்தது. விநாயகர் முன் நின்று கண்மூடினேன். விண்ணப்பம் செய்தேன். நம்பிக்கையாய் மணி ஒலித்தது. கண் திறந்தேன். தொங்கிக்கொண்டிருந்த மணியின் கயிற்றை தொட்டுக்கொண்டு ஒரு இளம்பெண்.

அவளுக்கு இருபது வயதுக்கு மேல் யாரும் சொல்ல மாட்டார்கள். அவள் ஒரு கையை உயர்த்தி நின்ற அழகு...

'ச்சே...! இங்கு வந்துமா?'– விநாயகரிடம் மானசிக மன்னிப்பு கேட்டுவிட்டு வெளியே வந்தேன். செருப்புகளைத் தேடி கால்களை நுழைக்க முயன்றவன், அப்படியே திகைத்துப் போய் நின்றேன்.

செருப்பில்– மடிக்கப்பட்ட ஒரு வெள்ளைக் காகிதம்.

சுற்றும் முற்றும் பார்த்தேன். யாரும் என்னை கவனித்ததாகத் தெரியவில்லை.

சட்டென்று குனிந்து காகிதத்தை கையில் எடுத்தேன்.

செருப்பை அணிந்துகொண்டு அவசரமாய் சாலைக்கு வந்தேன்.

சூரியன் காணாமல் போயிருந்தான்.

மடிக்கப்பட்ட காகிதத்தைப் பிரித்தான்.

வெளிச்சம் போதவில்லை.

சற்று தள்ளியிருந்த 'சோடியம்' விளக்கின் வெளிச்சத்தை நாடினேன்.

காகிதத்தில் கண்களை ஓடவிட்டேன்.

அதிர்ச்சி கண்களை தாக்கிற்று.

'இன்னும் ஒரு கத்தி–

என்னிடம் மீதமிருக்கிறது.

இரவு எட்டு மணி–

மறந்துவிட வேண்டாம்.'

– காகிதத்தை கசக்கி, பக்கத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் வீசினேன்.

ஆத்திரத்தில் முகம் சிவந்து போயிற்று.

'மிரட்டல்... கொலை மிரட்டல்.'

– அந்த முகம் தெரியாத எதிரி மீது ஏகமாய் கோபம் வந்தது.

'தைரியமில்லாத கோழை. நேரில் வந்து பேச வேண்டியதுதானே? நான் நிச்சயம் அறையை காலி செய்யப்போவதில்லை. வருவது வரட்டும்.'

– தீர்மானமாய் விடுதி நோக்கி நடந்தேன்.

வாசலில் இருந்த இளம்பெண் இப்போது புத்தகம் வைத்திருந்தாள்.

"சாவி..." – என்றேன்.

சாவியை எடுத்து கையில் தந்தாள்.

விரல்கள் தொட்டுக்கொண்டன. அவள் புன்னகைக்க முயற்சிப்பது போலிருந்தது.

அவள் புத்தகத்திற்கு திரும்ப–

நான் படியேறினேன்.

அறைக்குள் நுழைய தீர்மானித்தவன் நின்றேன்.

நதிரா அறை இன்னும் மவுனமாகவே இருந்தது.

நெருங்கினேன்.

'கதவைத் தட்டலாமா?' என்று யோசித்தேன்.

'வேண்டாம்.'

அந்த சின்ன பூட்டுக்கு சாவி வாங்கி வந்திருப்பது நினைவில் வந்தது.

'நதிரா இன்னுமா தூங்குகிறாள்? சாவி துவாரம் வழியே பார்ப்போமா. ச்சே... அநாகரீகம்.'

'நாகரீகமாவது... அநாகரீகமாவது?'

– தயக்கத்தை உதறிவிட்டு, சாவி துவாரம் வழியே பார்த்தேன்.

உள்ளே–

நதிரா படுக்கையில் அமர்ந்திருந்தாள்.

முதுகுதான் தெரிந்தது.

அவள் முகம் தெரியவில்லை.

ராணி முத்து ஜனவரி 16, 2010

எதிரில்-
திறந்து வைக்கப்பட்டிருந்தது... அந்த கறுப்பு 'சூட்கேஸ்'.
அதனுள்ளே-
சின்ன சின்னதாய் நிறைய பொட்டலங்கள் தெரிந்தன.
சுழல் விளக்கின் வெளிச்சத்தில்-
மினுக்கின தங்கக்கட்டிகள்.

## 5

**சா**வித் துவாரம் வழியே நான் பார்த்த காட்சி அப்படியே ஒரு நிமிடம் அசையாமல் அந்த இடத்திலேயே நிற்க வைத்தது. இதயம் வேகமாகிவிட்டது. முகமெங்கும் வியர்வை முத்துகள் பிறக்க ஆரம்பித்தன.

உள்ளே நதிராவோ தங்கக்கட்டி ஒன்றை எடுத்து சாவகாசமாய் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'என்ன செய்வது... இப்பொழுது என்ன செய்வது... உடனே போலீசுக்கு தகவல் சொல்லிவிடுவோமா? அதான் நல்லது... அதுதான் நல்லது.'

– அவசரமாய் படி இறங்கினேன்.

வரவேற்பில் இருந்த பெண்ணின் கையில் இப்பொழுது சாண்டில்யனின் 'கடல்புறா' இருந்தது. கண்கள் புத்தகத்தில் லயித்திருந்தன.

நான் அவள் முன்னால் போய் நிற்பதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. கொஞ்சம் அழகாய் தெரிந்தாள்.

சேலை, ஒத்துழையாமைப் போராட்டம் நடத்தியது.

புத்தகத்தில் இருந்து பார்வையை உயர்த்தி, 'என்ன வேண்டும்?' என்றாள், கண்களால்.

அவள் பார்த்த பார்வையில் எரிச்சல் மிதந்தது.

“போன்.”

– என்றேன், குரலை சிறிதாக்கி.

பித்தளைச் சாவியை சத்தம் ஏற்படுத்தாமல் மேசையில் வைத்தாள்.

அவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி எண்களை அழுத்தினேன்.



அவள் பார்வையோ மீண்டும் புத்தகத்தில் லயித்திருந்தது.
எதிர்முனையில் தொலைபேசி ஒலித்தது.
யாரோ எடுத்தார்கள்.
“ஹலோ”– என்றேன் நடுக்கமாய்.
எதிர்முனையில் சில ஒலிகளுக்கு பின்–
“ஹலோ, பூக்கடை போலீஸ் ஸ்டேஷன்.
நான் ரைட்டர் ரங்கசாமி பேசுறேன்”– என்றது, கரகரப்பாய்.
பதில் பேச எத்தனித்த என்னை–
'பொறு' என்றது உள் மனம்.
எதிர்முனை மீண்டும் கரகரத்தது.
“ஹலோ... பூக்கடை போலீஸ் ஸ்டேஷன். நான் ரைட்டர் ரங்க...”
– ரிசீவரை அதனிடத்தில் சத்தம் வராமல் வைத்தேன்.
அந்தப் பெண் சட்டென்று நிமிர்ந்து–
மனநோயாளியைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தாள்.

அந்த நிமிடம் சாண்டில்யன் எழுத்தின் சிருங்காரப் பகுதியை அவள் மேய்ந்துகொண்டிருக்க வேண்டும். நான் கரடியாய் நுழைந்த கோபம் கண்களில் தெரிந்தது.

ஒரு அரைப் புன்னகையை உதிர்த்துவிட்டு அவசரமாய் நழுவினேன்.

'அடுத்து என்ன செய்வது... போலீசில் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தை ஒத்திவைத்தாகிவிட்டது. அடுத்து... அடுத்து என்ன செய்வது?'

– படிகளில் ஏறும்போதே சிந்தனை நான்கு திசைக்கும் சுழன்றது.
'கத்தி... கடிதம்... மிரட்டல்... தங்க பிஸ்கட்.'
அவளிடமே கேட்டுவிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.
“தட்... தட்... தட்.”
– கதவைப் பலமாய் தட்டினேன்.
கொஞ்சநேர தயக்கத்துக்கு பின்...
கொஞ்சமாய் திறந்தது கதவு.
நதிராவின் முகம் மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தது.
அதில் நிறைய பயம்.
“நீங்கள்தானா... பயந்தே போய்விட்டேன்.”

– படபடப்புடன் வந்து விழுந்தன வார்த்தைகள்.

நீண்ட பெருமூச்சொன்று அவள் மார்பை தாலாட்டியது.

"என்ன அப்படி பாக்கிறீங்க... வாங்க."

– அசையாமல் நின்றுகொண்டிருந்த என்னை அவசரமாய் கையைப் பிடித்து உள்ளே இழுத்தாள்.

மின்னல் வேகத்தில் சத்தம் வராமல்–

கதவைப் பூட்டினாள்.

விடுவிடுவென்று நடந்து படுக்கையில் அமர்ந்தாள்.

என் கண்கள் பரபரப்பாக சூட்கேசை தேடின.

வாய் மூடி படுக்கையில் கிடந்தது 'சூட்கேஸ்'.

பக்கத்தில் அந்த சின்னப் பூட்டு வாய் திறந்து கிடந்தது.

அமர்ந்திருந்த அவளையே வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றேன்.

"என்ன நின்னுக்கிட்டே இருக்கீங்க... பக்கத்துல உட்காருங்க. பெரிய கதை"– என்றாள் கண்களை அகலமாய் விரித்து.

'கதையா சொல்லப் போகிறாய் கதை. சொல் நதிரா சொல். நான் போலீசை அழைத்து வரும் மட்டும் சொல்.'

–மனதுக்குள் சிரித்துக்கொண்டே அவள் அருகில் அமர்ந்தேன்.

"பூட்டுக்கு சாவி வாங்கி வந்திருக்கிறேன்."

– அவள் முன்னால் சாவிகளை போட்டேன்.

"இனி சாவி வேண்டாம். 'சேப்டி பின்'னுக்கே இந்த நோஞ்சான் பூட்டு திறந்துகொண்டது."

– மெலிதாக சிரித்துக்கொண்டே....

பூட்டை எடுத்து என் கையில் தந்தாள். பெட்டியை உடனே திறக்கச் செய்யலாமா என்ற என் எண்ணத்தை உடைத்துப் போட்டது அவள் பேச்சு.

"எனக்கு இப்ப இரண்டு அதிர்ச்சி. ஒண்ணு இந்தப் பெட்டி எனக்கில்லை. இரண்டு, உள்ளே இருக்கிற பொருள்."

– அதிர்ந்தேன்.

'என்ன கதையையே மாற்றுகிறாள்.'

குரலில் வியப்பை வரவழைத்துக்கொண்டு கேட்டேன்.

"அப்படி என்னதான் இருக்கிறது இந்தப் பெட்டியில்?"

– கேட்ட அடுத்த விநாடியே பெட்டியை அகலமாய் திறந்தாள்.



முகத்தில் அறைந்தது காட்சி.

உள்ளே சின்ன சின்ன பொட்டலங்களும், தங்கக்கட்டிகளும் மினுக்கின.

முதல் முறையாக பார்ப்பது போல முகம் முழுவதும் ஆச்சரியம் காட்டினேன்.

"என்ன இதெல்லாம்?"

– என்று கேட்டேன்... குரலில் சந்தேகம் தொனிக்க.

"என்ன இதெல்லாம் என்று என்னிடம் கேட்கிறீர்கள். நானே தலையும் புரியாமல், காலும் புரியாமல் விழிக்கிறேன்."

– தங்கக்கட்டி ஒன்றை எடுத்து நான் உற்றுப் பார்த்தேன்.

ஏதோ சின்னதாய் முத்திரை.

பொட்டலம் ஒன்றை எடுத்து நிதானமாய் பிரித்துப் பார்த்தேன்.

'பிரவுன் சுகர்'.

"உடனே போலீசிடம் ஒப்படைத்துவிடுவது நல்லது."

– என்றேன், அழுத்தம் திருத்தமான குரலில்.

"வேண்டாம்" – என்றாள் அவசரமாய்.

"ஏன்?"– என்று கேள்வி கேட்டேன் கோபமாய்.

"இப்பொழுது நேரம் என்ன?"

"ஏழு இருபத்தெட்டு" – என்றேன் புரியாமல்.

"இப்பொழுது நாம் போலீசுக்கு தகவல் சொன்னால், விசாரணை அது இதுவென்று நம் மீதே சந்தேகப்பட்டு, நாம் இரண்டு பேரையும் ஸ்டேஷனிலேயே விடிய, விடிய உட்கார வைத்துவிடுவார்கள்."

– அவள் வார்த்தைகளில் உண்மை இருந்தது.

"பிறகு என்னதான் செய்வது?"

–என்று கேட்டேன், அவளை சந்தேகமாய் பார்த்துக்கொண்டே....

"நாளை விடிந்ததும் நாம் இரண்டு பேரும் போலீஸ் ஸ்டேஷன் போய், இந்த சூட்கேசை ஒப்படைத்துவிடுவோம்... சரிதானா?" – என்று சொல்லிவிட்டு, என் பதிலுக்காய் முகம் பார்த்தாள்.

'இவள் உண்மையைத்தான் பேசுகிறாளா... இல்லை என்னை ஏமாற்றிவிட்டு இன்று இரவே தப்பி ஓட திட்டம் போடுகிறாளா...? பொய் சொல்கிறவள் ஏன் நம்மிடம் சர்வ சாதாரணமாக சூட்கேசை திறந்துகாட்ட வேண்டும்? நான் சாவி துவாரம் வழியே திருட்டுத்தனமாய் உற்றுப் பார்த்ததை தெரிந்துகொண்டிருப்பாளோ... அதனால்தான்





இப்படியா?'

"என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை. நீ சொன்னது சரிதான். ஆனால், நாளை காலையில் நீ கண்டிப்பாய் 'இன்டர்வியூ' செல்ல வேண்டும். 'சர்ட்டிபிகேட்', துணிகள் இருந்த உன் சூட்கேசையும் காணவில்லை. என்ன செய்யப் போகிறாய்."

"பெட்டி எப்படியோ வழியில் மாறிவிட்டது"

– என்றாள், கவலையில்லாமல்.

"பெட்டி எங்கே வைத்து மாறியிருக்கும்? நீ கோவில்பட்டியில்தானே ரெயிலில் ஏறினாய்?"

"எங்கே வைத்து மாறியிருக்கும்... எனக்கு புரிந்துவிட்டது. உங்களிடம் அவசரமாய் ஒரு உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நான் எந்த 'இன்டர்வியூ'வுக்காகவும் சென்னை வரவில்லை."

– திடீரென்று தாக்கிய அதிர்ச்சியில் வாய் வார்த்தைகள் இழந்து நின்றேன். அவளே தொடர்ந்து பேசினாள்.

"மனித உருவத்தில் இருக்கும் குள்ளநரி ஒன்றிடமிருந்து தப்புவதற்காகத்தான் சென்னைக்கு ஓடி வந்தேன். ரெயில் பயணத்தில் உங்கள் நட்பு கிடைத்தது."

– என்றாள், சர்வ சாதாரணமாய்.

"நீ 'இன்டர்வியூ'வுக்கு வரவில்லை. நீ இங்கு கொண்டு வந்திருக்கும் பெட்டி உனக்கில்லை. யாரோ உன்னை துரத்துகிறார்கள். கொஞ்சம் புரியும்படியாக சொல் நதிரா."

"நீங்கள் எனக்கு நிச்சயம் உதவி செய்வீர்கள் என்று என் உள்மனம் சொல்கிறது.

ஒரு மணி நேரம் கழித்து உங்கள் அறைக்கு வந்து என் கதையை, என் சோகக் கதையை சொல்கிறேன். உங்களிடம் நான் சொல்லியாக வேண்டும்."

– என்றாள் கண் கலங்க.

முகத்தில் சோக மேகங்கள். என் நெஞ்சில் இரக்கம் நீரூற்றாய் கிளம்பியது.

'கடிதம், கத்தி, மிரட்டல் பற்றி சொல்லிவிடுவோமா.'

– அடுத்த விநாடி சந்தேகம் வந்து குறுக்கே நின்றது.

'நாம் அறைக்கு திரும்பி சென்றதும் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடி விடுவாளோ?'

– நதிரா அடுத்து உதிர்த்த வார்த்தைகள் என்னை அசர வைத்தன.

"என்ன கோபமா...? இவன் என்ன தன்னைப் பற்றி எதுவுமே சொல்ல மறுக்கிறானே என்ற எண்ணமா? இன்னும் அறுபது நிமிடங்கள் என் கதைக்காக பொறுமையுடன் காத்திருங்கள். ம்... இந்தப் பெட்டி உங்கள் அறையில் இருக்கட்டும்."

– என்று சொல்லிவிட்டு சூட்கேசை தூக்கி என் கையில் தந்தாள்.

தயக்கத்துடன் எழுந்துகொண்டேன்.

"சீக்கிரம் அறைக்கு வா. உனக்காக காத்திருப்பேன்."

– என்று சொல்லிவிட்டு திரும்பியவளை, தோள் தொட்டு நிறுத்தினான்.

"என்ன?"– என்றேன் இதயம் நடுங்க.

"தருவதை வாங்கிவிட்டுப் போங்கள்."

"என்ன தரப் போகிறாய்?"

– எதுவும் புரியாமல் கேட்டேன்.

"குருதட்சணை."

– என்றாள், உதடுகளை அழகாக அசைத்து– சுழித்து.

நான் அவள் உதடுகளை இமை மோதாமல் பார்த்துக்கொண்டு இருக்கும்பொழுதே– நதிராவின் கையில் துப்பாக்கி ஒன்று முளைத்திருந்தது.

## 6

ஒரு நிமிடம் கண் இமைக்க மறந்தேன்.

நதிராவின் கையில் முளைத்திருந்த துப்பாக்கி எனக்கு திகைப்பையும், பயத்தையும் தந்திருந்தது. அந்தத் துப்பாக்கியின் வாயில் 'சைலன்சர்' பொருத்தியிருந்தது. சத்தம் செய்யாமல் உயிர் பறிக்கும் எமன்.

உயிரை விடுகிறவன்தான் சத்தம் போட வேண்டும்.

மீண்டும் சிரித்தாள். இந்த முறை உதடு அசையாமல்.

இந்தச் சிரிப்பில் விஷமம் தடவியிருந்தது.

விரல், துப்பாக்கியின் குதிரையை தடவிக்கொண்டிருந்தது.

'ஓடிவிடலாமா... இல்லை, காலில் விழுந்துவிடலாமா?'

– நான் முடிவெடுப்பதற்குள் அவள் முடிவு செய்துவிட்டாள்.



முட்டாள் பெண் அவசரப்பட்டு எனக்கு முடிவுரை எழுதிவிட்டாள். தொடர் கதைக்கு 'முற்றும்' போட்டுவிட்டாள்.

நதிராவின் ஆட்காட்டி விரல், துப்பாக்கியின் குதிரையை பின்னோக்கி இழுத்திருந்தது.

அதுவும் மீண்டும்... மீண்டும்...

ஒன்று...

இரண்டு...

மூன்று...

– என வரிசையாய் மூன்று தோட்டாக்களை சப்தமில்லாமல் என் இதயப் பிரதேசத்துக்கு அனுப்பியது அந்தத் துப்பாக்கி. சத்தமிட நினைத்தும் சத்தமிட முடியவில்லை.

இதயத்தில் இருந்து சிவப்பாய் ரத்தம் குமிழியிட்டு வெளியே வந்தது.

'ச்சே... இது என்ன விழித்துக்கொண்டே கனவா...? அல்லது விபரீத கற்பனையா...?'

அம்மம்மா... நல்ல வேளை, என் கற்பனைப்படி எதுவும் நடக்கவில்லை. எதிரில் நதிரா விஷமமில்லாத குழந்தைச் சிரிப்புடன் நின்றுகொண்டிருந்தாள்.

"குருதட்சணை வேண்டாமா?"

– என்றாள் சிணுங்கலாய்.

"கொடேன்."

– என்றேன் சுரத்தில்லாமல்.

கண்கள் சிரிக்க அருகில் வந்தாள்.

என்னை உற்றுப் பார்த்தாள்.

அதில் ஒரு வசீகரம் இருந்தது.

நான் எதிர்பாராத தருணத்தில்–

என் பிடரியில் கைவைத்து, என்னை இழுத்து, இரண்டு கன்னத்திலும் மின்னல் வேகத்தில் 'பச்சக்'கென்று அழுத்தமாய்... முத்தம் தந்தாள்.

எனக்கு ஆச்சரியம், இன்பப் பிரமிப்பு, அதிர்ச்சி... ஏதோ ஒன்று நீங்குவதற்குள் –

நதிரா தூரமாய் நின்றுகொண்டிருந்தாள்.

"உங்கள் அறையில் இருங்கள். குளித்துவிட்டு வருகிறேன். என்னைப் பற்றி முழுவதும் தெரிந்துகொள்ளலாம், சரிதானே?"

" ஒரு கண்ணை மூடி திறந்து சிரித்தாள் நதிரா.

நான் தலையாட்டி பொம்மையாய் தலை அசைத்துவிட்டு என் அறைக்கு திரும்பினேன்.

பெட்டியைப் படுக்கையின் அடியில் தள்ளினேன்.

அவசரமாய் கதவைப் பூட்டினேன்.

அப்படியே ஓடிவந்து படுக்கையில் மல்லார்ந்து விழுந்தேன்.

உடல் வெப்பத்தில் கொதித்தது.

மன்மதன் இருபத்தி நான்கு மணி நேரமும் அம்பு எய்திருக்க வேண்டும்.

கை, கால், கழுத்து என்று தொட்ட இடமெல்லாம் வலித்தது.

இரண்டு கன்னத்தையும் ஒரு முறை தொட்டுப் பார்த்துக்கொண்டேன்.

'நதிராவின் உதடுகள் அழுத்தமாய் பதித்த இடம் இதுதானே?' என்ற நினைப்பே இனித்தது.

தொடர்ந்து பெருமூச்சு வந்தது.

அகநானூற்று புலவர்களுக்கு தெரிந்தால் எதாவது நோய் என்று சொல்லிவிடுவார்களோ என்று மனதுக்குள் பயந்தேன்.

இன்னும் சிறிது நேரத்தில் குளித்துவிட்டு வரப்போகும் நதிராவுக்காக உடலும், உள்ளமும் காத்துக் கிடந்தது.

'யார் இந்த நதிரா... உண்மையிலேயே இந்தப் பெண்ணின் பெயர் நதிராதானா? இவளை யார் துரத்துகிறார்கள்? அந்த ... கத்தி, மிரட்டல், சூட்கேஸ், தங்கம்.'

– வரிசையாய் மனதுக்குள் ஓடிய கேள்விகள் அனைத்தும் கடைசியில் கரைந்து போய்– நதிராவின் அழகு சிரிப்பும், அந்த அழுத்தமான முத்தமும்தான் திரும்ப திரும்ப கண்முன் வந்தன. அந்த உதடுகள்... அந்த உதடுகள்...

புரண்டு புரண்டு படுத்தேன்.

'நதிரா அறைக்குள் நுழைந்ததும் எந்தக் கேள்வியை முதலில் கேட்க வேண்டும். நீ யார் என்றா? யார் உன்னை துரத்துகிறார்கள் என்றா? இல்லை... இந்த கத்தி மிரட்டலை அவளிடம் சொல்லிவிடலாமா? ஒன்றும் வேண்டாம். நான் இருக்கிறேன் நதிரா என்று ஆதரவாய் அணைத்துக்கொள்ள வேண்டும். அவளை அப்படியே இறுக்கி, உதடுகளைத் தேடி.'

– நதிரா மட்டும் வரவேயில்லை.



கண்கள் என்னுடன் ஒத்துழைக்க மறுத்தன.

அப்படியே தூங்கிப்போனேன்.

ஐயாயிரத்து நானூற்றி இருபத்தி மூன்று விநாடிகள் கழித்து...

சட்டென்று திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன்.

கதவை யாரோ வேகமாய் தட்டினார்கள்.

'நதிராவாகத்தான் இருக்கவேண்டும்.'

கலையாத ஏக்கத்துடன் கதவை நெருங்கினேன்.

கதவு அதிர்ந்தது.

தாழ்ப்பாளை நீக்கி, கதவை அகலமாய் திறந்தேன்.

நதிராவேதான்!

மயக்கத்தில் இருப்பவள் போல தள்ளாடி என்னை கட்டிப்பிடித்துக்கொண்டாள்.

"விஜய்."

– என்றாள், உளறலாய்.

அந்த உளறல் எனக்கு நிறையவே கிறக்கம் தந்தது.

நதிராவை அப்படியே சேர்த்து இறுக்கமாய் அணைத்துக்கொண்டேன்.

கைகளில் பிசுபிசுப்பாய் ஏதோ ஒட்டியது.

அது– ரத்தம்.

## 7

நதிராவை இறுக்கி அணைத்தவன்– ஈரமான பிசுபிசுப்பை உணர்ந்து கைகளை கொஞ்சம் தளர்த்தினேன். என் உடலில் மெதுவாய் வழுக்கிக்கொண்டு, கும்பிட்ட நிலையில் எனது கால்களில் விழுந்தாள் நதிரா.

அதிர்ந்தேன்.

அவள் முதுகு முழுவதும் ரத்தமாய் பரவி சட்டையை சிவப்பாக்கி இருந்தது.

முதுகிலிருந்த ஆழமான காயம் ஒன்றிலிருந்து ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

பயத்துடன் என் உள்ளங்கையை விரித்துப் பார்த்தேன்.

பிசுபிசுப்பான சிவப்பு ரத்தம்.

இதயம் தாறுமாறாய் 'லப் டப்' சொன்னது.

நதிரா அசைவற்று இன்னும் அதே நிலையில் இருந்தாள்.

எனக்குள் மெல்ல பதற்றம் நுழைந்தது.

'நதிரா இறந்துவிட்டாளா?'

– குனிந்து அவளின் தோள் தொட்டு –

"நதிரா" – என்றழைத்தேன்.

பதில் இல்லை.

"நதிரா."

– தோளை உலுக்கினேன், நடுக்கமாய்.

அப்படியே மல்லார்ந்து விழுந்தாள்.

லுங்கி தொப்புளுக்கு கீழே நழுவி இருந்தது கூட உணர்வில்லாமல் அசைவற்று கிடந்தாள்.

'ஒன்று, நதிரா மயங்கியிருக்க வேண்டும். இல்லை, இறந்து போயிருக்க வேண்டும்.'

– யாரோ படிகளில் வேகமாய் தடதடத்து இறங்கும் சத்தம் கேட்டது.

அவசரமாய் லுங்கியை மடித்து கட்டிக்கொண்டு படிக்கட்டை நோக்கி ஓடினேன்.

அங்கே யாரையும் காணவில்லை.

மின்னல் வேகத்தில் படிகளை கடந்து, முன் அறையைக் கடந்து சாலைக்கு வந்தேன்.

ஒரு குறுந்தாடிக்காரன் திரும்பி என்னை பார்த்துவிட்டு ஓடத் தொடங்கினான்.

இரவு பத்து மணி தாண்டிவிட்டதால் சாலையில் அதிக கூட்டமில்லை.

நானும் பின்னால் ஓடத் தொடங்கினேன்... வேகமாய்.

அந்த குறுந்தாடிக்காரன் சட்டென்று ஒரு சந்தில் திரும்பி ஓடினான்.

மூச்சிரைக்க பின்தொடர்ந்தேன்.

வழியில் தடங்கலாய் எருமை மாடுகள்... மாநகராட்சி கவனிக்காத குப்பைகள்...

குவியல் குவியலாய் சாணம்... குப்பைத் தொட்டிகள்...



எல்லாவற்றையும் அநாவசியமாய் தாண்டினேன்.

இதயத்தில் 'ஓடு... ஓடு' என்றது. இதைத் தவிர வேறொன்றுமில்லை.

ஓடினேன்...

ஓடினேன்... ஓடினேன்...

அவனை பின்தொடர்ந்து ஓடினேன்.

திடீரென்று வலது கணுக்காலில் 'மளுக்'கென்ற சத்தம் வந்தது.

'ஏதாவது பள்ளத்தில் கால் மாட்டியிருக்க வேண்டும்.'

அடுத்த விநாடி குப்புற விழுந்தேன்.

விழுந்தவன் எழுந்து நிற்பதற்குள் –

அந்தக் குறுந்தாடிக்காரன் அடுத்த சந்தில் காணாமல் போயிருந்தான்.

மீண்டும் ஓட எத்தனித்தேன்.

வலது கணுக்காலில் 'சுரீர்' என்று வலி பரவியது.

இடது முழங்காலில் 'துபு... துபு'வென்று எரிந்தது.

குனிந்து தடவிப் பார்த்தேன்.

பிசுபிசுவென்று ஒட்டியது, என் ரத்தம்.

அதுவரை சிந்திக்காத மூளை மீண்டும் சிந்திக்க ஆரம்பித்தது வேகமாய்.

'அடுத்து என்ன செய்வது... கொலைகாரன் தப்பி ஓடிவிட்டான்... என்ன கொலைகாரனா...?

நதிரா இறந்துபோய்விட்டாள் என்றே முடிவு செய்துவிட்டேனா...? அவள் இறந்து போயிருப்பாளோ...?

லாட்ஜ் மொத்தமும் இப்பொழுது அலறிக்கொண்டிருக்கும். உடனே போலீசுக்கு தகவல் சொல்ல வேண்டும்.'

– மெல்ல நொண்டியபடி மெயின் ரோடு வந்து சேர்ந்தேன்.

நான்கு திசைகளிலும் கண்களை சுழற்றினேன்.

'டெலிபோன் பூத்' ஒன்றையும் காணவில்லை.

காலில் நடக்க முடியாத வலி.

ஆட்டோவுக்காய் கண்களை ஓடவிட்டேன்.

வந்துகொண்டிருந்தது ஆட்டோ ஒன்று.

ஆட்டோவுக்காய் காத்து நின்ற என் தோளைத் தொட்டு திருப்பியது– வலுவான கரம் ஒன்று.

திரும்பினேன்.

கண்ணில் பட்டது காக்கிச் சட்டை.

என்னை அறியாமலே உடல் மெலிதாய் நடுங்கியது.

எதிரில் கோப முகத்துடன் நின்றார், அந்த காக்கிச் சட்டைக்காரர்.

அவர் உடுப்பு போலீஸ் என்றது.

"யாரைடா பார்த்துகிட்டு நிக்கிறே?"

– கோபமானேன்.

"கொஞ்சம் மரியாதையா பேசுங்க."

– என்றேன், படபடப்பாய்.

"மரியாதை கேட்குதா தொரைக்கு. அடி செருப்பால. லாட்ஜ்ல பொண்ணை வைச்சிட்டு, கிராக்கிகளை பிடிக்கிறதுக்காக வந்து நீ நிக்கிறது தெரியாதுன்னு நெனச்சியா... நான் யாரு தெரியுமில்ல... ஏட்டு ரங்கசாமி."

– அவர் ஏக வசனம் பேச பேச எனக்கு பயம் வந்தது.

"நானே போலீசை பார்க்கிறதுக்காகத்தான் புறப்பட்டுக்கிட்டு இருந்தேன்."

"கதையாடா விடுறே... ஏட்டு ரங்கசாமிகிட்ட. நடடா போலீஸ் ஸ்டேஷனுக்கு."

– என் காலரை கொத்தாக பிடித்து இழுத்தார்... வேகமாய்.

கோபத்தில் என் தசைகள் முறுக்கிக்கொண்டன. பற்கள் உரசிக்கொண்டன.

'கோபம் பயன் தராது... அவசரம் வேண்டாம்.'

நிமிர்ந்து பார்த்தேன்.

"என்ன, முறைக்கிறியா?"

– ஏட்டு ரங்கசாமி நல்ல புஷ்டியுடனும், ஆறடியைத் தாண்டிய உயரத்துடனும் இருந்தார்.

'விஜயகுமார்... இப்போதைக்கு பணிந்து போவதே நல்லது. ஸ்டேஷனுக்கு சென்றதும் விளக்கமாய் சொல்லிக்கொள்ளலாம்.'

– பலி ஆடாய் அவர் இழுத்த இழுப்புக்கு ஏற்ப பின்னால் நடந்தேன்.



# 8

ஏட்டு ரங்கசாமி தள்ளிய வேகத்தில் –

சினிமாவில் விழுவது போல் விழுந்தேன்.

விழுந்த இடத்தில் இரண்டு பூட்ஸ் கால்கள்.

கொஞ்சம் நளினமாய் அசைந்தன.

நிமிர்ந்து பார்த்தேன்.

அந்த இக்கட்டான நேரத்திலும் மனம் சந்தோஷம் காட்டியது. நளினமான கால்களுக்கு சொந்தக்காரி –

ஒரு பெண் சப்-இன்ஸ்பெக்டர்.

வைத்த கண் வாங்காமல் என்னை பார்த்துக்கொண்டிருந்தாள்.

'நான் அவ்வளவு அழகாக இருக்கிறேனா?'

– சிரமத்துடன் எழுந்துகொண்டேன்.

அந்தப் பெண்ணை, சாரி... அந்த இளம் பெண்ணை வர்ணிக்காவிட்டால் உங்களுக்கு துரோகம் செய்தவன் ஆகிவிடுவேன். அவள் வாய் திறக்கும் முன் வர்ணித்து விடுகிறேன்.

மார்பு பிரதேசத்தின் வசதியில்லாத இடத்தில் இருந்த சிறிய பட்டை – அவள் பெயர் நீபா என்றது. உயரம் ஐந்தடி ஆறங்குலம் இருக்கலாம். எடை... வாய்ப்பு கிடைத்தால் சொல்கிறேன். உதடுகளில் பளபளப்பு – பிடிவாதம். கன்னங்களில் நிறைய மினுமினுப்பு. காக்கிச் சட்டையை மீறிய...

"ரங்கசாமி, இவரை எதுக்காக பிடிச்சிட்டு வந்திருக்கீங்க?"

"இவன் பார்வையே சரியில்லை மேடம். அதனால தள்ளிட்டு வந்துட்டேன்."

"இவரைப் பார்த்தா அப்படித் தெரியலியே...?"

"நான் முப்பது வருஷமா போலீஸ் வேலை பார்க்கிறேன். எனக்குத் தெரியாதா மேடம்."

நான் குறுக்கிட்டேன்.

"மேடம்... என்னைப் பற்றி தெளிவா சொல்லிடுறேன்."

– என் கதையை சொல்ல ஆரம்பிப்பதற்குள் இன்ஸ்பெக்டர் உள்ளே வந்துவிட்டார். தொப்பியை கழற்றி மேசையில் வைத்தார். மார்பு பட்டை அவர் பெயர் 'கதிரவன்' என்றது. வயது மிஞ்சினால் நாப்பது இருக்கும்.

உயரம் ஐந்தடி பத்து அங்குலம் இருக்கலாம். அடர்த்தியான மீசை.

தொலைபேசி கிணுகிணுத்தது. ரிசீவரை கையில் எடுத்து "ஹலோ" என்றார்.

அடுத்த விநாடிகளில் இன்ஸ்பெக்டர் முகம் நிறைய ஜாலம் காட்டியது. இடையிடையே 'உம்' கொட்டினார். இரண்டொரு தடவை கூர்மையாய் என்னைப் பார்த்தார்.

கடைசியாய்–

"யாரும் அருகே போக வேண்டாம். எந்தப் பொருளையும் தொடவும் வேண்டாம். அஞ்சு நிமிஷத்தில வர்றேன்."

– என்று சொல்லிவிட்டு, ரிசீவரை அதனிடத்தில் வைத்தார் 'கடக்'கென்று.

தொப்பியை எடுத்து மிடுக்காய் அணிந்தார்.

அடுத்த செயலாய்– என்னை ஒரு நேர் பார்வை பார்த்தார்.

அந்த பார்வையில் கொஞ்சம் முறைப்பும், கொஞ்சம் சந்தோஷமும் தெரிந்தது.

என் அருகில் வந்தார், துள்ளல் நடையுடன்.

என்னை ஒரு முறை மேலும் கீழும் பார்த்தார்.

கண்களில் உற்சாகம் மினுக்கியது.

"கறுப்பு கோடு போட்ட வெள்ளைச் சட்டை. ஆள் நல்ல சிவப்பு. கொஞ்சம் சுருள் முடி. அஞ்சரை அடி உயரம்."

– என்று என் அடையாளங்களை வரிசையாய் சொன்னவர், என்னைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தார்.

அது, பொறியில் சிக்கிய எலியைப் பார்த்து சிரிப்பது போலிருந்தது.

"உங்க பேரு விஜயகுமார். லாட்ஜ்ல ஒரு பெண்ணை கொலை செய்துட்டு ஓடி வந்திருக்கீங்க. சரிதானே?"

– எனக்கு அதிர்ச்சியில் உடனே பேசத் தோன்றவில்லை.

கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது.

வாய் நிறைய குழறியது.

"சார்... வந்து... கொலை... நதிரா."

"விஜயகுமார்... இப்ப எதுவும் பேச வேண்டாம். நீங்க கொலை செய்ததை பின்னால தெளிவா நடிச்சிக்காட்டலாம். மிஸ்டர் ரங்கசாமி, உங்க முப்பது வருஷ 'சர்வீஸ்'ல இன்னிக்குத்தான் உருப்படியா ஒரு காரியம்



செய்திருக்கீங்க. இவரை கண்காணிக்க வேண்டிய மொத்த பொறுப்பும் உங்களோடதுதான். மிஸ் நீபா, ஜீப்பை 'ரெடி' பண்ணுங்க."

– என்று இன்ஸ்பெக்டர் கதிரவன் கம்பீரமான குரலில் கட்டளையிட,

நான் திக்பிரமை பிடித்தவன் போல் நின்றுகொண்டிருந்தேன். சப்–இன்ஸ்பெக்டர் நீபா என்னை பார்த்த பார்வையில் ஆச்சரியம் மிதந்தது.

'இனி என்ன நடக்கும்? என்னை என்ன செய்யப் போகிறார்கள்?'

– ஏட்டு ரங்கசாமி மீசையை முறுக்கியபடி என்னையே கவனித்துக்கொண்டு நின்றார்.

அடுத்த மூன்றாவது நிமிடம்– என் ஒரு பக்கம் போலீஸ்கார் ஒருவரும், இன்னொரு பக்கம் ஏட்டு ரங்கசாமியும் அமர்ந்திருந்தார்கள். நான் என் மனைவி செண்பகவல்லியை நினைத்துக்கொண்டிருந்தேன். ஜீப் எந்தவித குலுக்கலும் இல்லாமல் தார் சாலையில் ஓடியது. எதிர் இருக்கையில் இன்ஸ்பெக்டர் கதிரவனும், சப்–இன்ஸ்பெக்டர் நீபாவும் நெருக்கமாய் அமர்ந்திருந்தது எனக்கு எரிச்சல் தந்தது.

கொஞ்ச நேரத்தில் லாட்ஜ் முன் சின்னதாய் 'பிரேக்'கிட்டு குலுக்கலுடன் நின்றது ஜீப். நீபா குதித்து இறங்கினாள் குலுங்கலுடன். வரிசையாய் இறங்கினார்கள். நானும் இறங்கிக்கொண்டேன். ஏட்டு ரங்கசாமி தன்னுடைய இரண்டு கண்களையும் என் மீதே வைத்திருந்தார்.

என்னைத் தள்ளிக்கொண்டு லாட்ஜுக்குள் நுழைந்தார் இன்ஸ்பெக்டர்.

"சார், இவன்தான் அந்தக் கொலைகாரன்."

– என்று கத்தினார், 'லாட்ஜ்' கிழவர் பயத்துடன்.

"எனக்கும் தெரியும். பிணம் எங்கே கிடக்குது?"

–குரலில் கம்பீரத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டார் இன்ஸ்பெக்டர்.

கிழவர் மெலிதான குரலில்–

"மேலே..."

– என்றார், ஒற்றை விரல் உயர்த்தி.

கண்களோ தரை பார்த்தன, நடுக்கத்துடன்.

அவருக்கு பின்னால் நின்றுகொண்டிருந்த பெண் மெல்ல எட்டிப் பார்த்தாள், பயத்துடன். கையில் 'கிரைம்' நாவல் இருந்தது. கண்கள் 'கொலைகாரா' என்றது.

"விஜயகுமார்... முன்னால போங்க."

– இன்ஸ்பெக்டர் குரல் கட்டளையிட, படிகளில் ஏறினேன் மவுனமாய்.

ஏட்டு ரங்கசாமி என்னை ஒட்டியபடியே நடந்து வந்தார்.

என் அறை வாசல் வந்ததும்– அத்தனை பேரும் அசையாது நின்றார்கள்.

நதிரா மல்லார்ந்து கிடந்தாள்.

லுங்கி ரொம்பவும் அலங்கோலமாய் விலகிக் கிடந்தது.

உதடு திறந்திருந்தன.

கண்கள் ஒரே புள்ளியை பார்த்தன.

'நதிரா... நீ யார்? என்னோடு எதற்காக வந்தாய்? உன்னை துரத்தி துரத்தி கொன்றவன் யார்... யார்? நீ ஏன் இந்த வயதில் செத்துப் போக வேண்டும்? நான் ஏன்...?'

"விஜயகுமார், இது உங்க அறைதானா?"

"ஆமாம்."

– என்றேன், தலையசைத்து.

"இந்தப் பொண்ணு உங்கக்கூட தங்கி இருந்ததா?"

"இல்லை சார். பக்கத்து அறையில தங்கி இருந்திச்சி."

– என்றார், அருகில் நின்ற 'லாட்ஜ்' கிழவர் அவசரமாய்.

கிழவரை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு– நான் தங்கி இருந்த அறைக்கும், நதிரா தங்கிய அறைக்கும் இடைப்பட்ட தரைப் பகுதியை கூர்ந்து பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

வரிசையாய் ரத்தப் பொட்டுகள்.

நதிரா அறையின் கதவை தொட்டார் கதிரவன்.

தொட்ட மாத்திரத்தில் அகலமாய் திறந்துகொண்டது.

அதிர்ச்சி காத்திருந்தது.

அறையின் நடுப்பகுதியில் ரத்தச் சிதறல்கள்.

இன்ஸ்பெக்டர் சிந்தனையுடன் விரல்களால் காதை வருடினார்.

கண்கள் யாரையோ தேடின.

"எங்கே மிஸ் நீபா"

வார்த்தைகளு: [illegible]ன.

இன்ஸ்பெக்டர் நீபாவை காணவில்லை.

வாய் எதோ முணுமுணுத்தது.



தயக்கத்துடன் என் அறைக்குள் நுழைந்தார்.

நான் நின்ற இடத்திலேயே அசையாமல் நின்றேன்.

அறைக்குள் நுழைந்த இன்ஸ்பெக்டர் கண்களில் என் பெட்டி பட்டது.

பெட்டியை தூக்கி படுக்கையில் வீசினார்.

என் இதயம் வேகமாகியது.

'அந்த கறுப்பு சூட்கேஸ் கண்ணில் பட்டுவிடுமே. என்ன பதில் சொல்லப் போகிறேன்?'

நான் நினைத்தது நடந்தது.

படுக்கைக்கு அடியில் குனிந்து பார்த்தார், இன்ஸ்பெக்டர்.

"என்னய்யா விஜயகுமாரு... உனக்கு ரெண்டு பெட்டியா?"

– கேள்வி கேட்டவர், என் பதிலை எதிர்பார்க்காமல் குனிந்து பெட்டியை எடுத்தார்.

எனக்கு அந்த இடத்தைவிட்டு ஓடிவிடலாம் போலிருந்தது.

பக்கத்தில் எமனாய் ஏட்டு ரங்கசாமி.

பெட்டியைத் தூக்கி படுக்கை மீது வைத்தார் சிரமமாய்.

அந்தப் பெட்டி தானே திறந்துகொண்டது.

முழுவதுமாய் திறந்தவரின் முகத்தில் அதிர்ச்சி.

எனக்கு முன்னால் வந்து நின்று எட்டிப் பார்த்தது 'லாட்ஜ்' பெண்.

சுற்றி நின்றவர்கள் கண்களிலும் அதிர்ச்சி பரவியிருந்தது.

அந்த கறுப்புப் பெட்டிக்குள்–

தங்கக்கட்டிகள் மினுக்கின.

பொட்டலங்கள் சிரித்தன.

ஒரு பொட்டலத்தைப் பிரித்து முகர்ந்து பார்த்தார்.

"பிரவுன் சுகர்."

– என்று உதடுகள் முணுமுணுத்தன.

அடுத்த விநாடி பெட்டியை கோபமாய் மூடினார்.

திரும்பி என்னைப் பார்த்தார்.

இத்தப் பார்வையில் அனல் பறந்தது.

சப்-இன்ஸ்பெக்டர் நீபா குறுக்கே வந்தாள்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் தடயவியல் ஆட்களும்,

போட்டோகிராபரும் வந்திடுவாங்க சார்."

"மிஸ் நீபா. இந்த கறுப்பு சூட்கேஸ்ல தங்க பிஸ்கட், பிரவுன் சுகர் இருக்குது. கவனம். தடயவியல் வேலை முடிந்ததும், பிணத்தை பரிசோதனைக்கு அனுப்பிடுவாங்க. விசாரணையை நாளைக்கு வைச்சிக்கலாம். விஜயகுமாரை நம்ம 'கஸ்டடி'யில வைக்கிறேன். வரட்டுமா?"

– நீபாவிடம் விடை பெற்று திரும்பியவர் முன், ஓடிவந்து நின்றார் காவலர் ஒருவர்.

"என்னம்மா...?"

"கொலை செய்த எந்த ஆயுதமும் கிடைக்கல சார்."

"அதை விஜயகுமாரிடம் கேட்டுக்கலாம்."

– என் பக்கம் திரும்பினார், அவசரமாய்.

"தங்க பிஸ்கட் இருந்த கறுப்பு சூட்கேஸ் உங்களுடையதுதானா?"

"இல்லை சார்."

"உங்க அறையில இருக்கிற பெட்டி உங்களுடையது இல்லைன்னு சொல்றீங்க... பின்ன யாருக்கு?"

"நதிராவுக்கு."

"என்னது... நதிராவுக்கா?"

"இதோ செத்துக் கிடக்குதே இந்தப் பொண்ணுக்கு."

– தரையில் மல்லார்ந்து கிடந்த நதிராவைக் காட்டினேன்.

திறந்திருந்த அவள் கண்கள், 'ஏன் பொய் சொல்கிறாய்?' என்றன.

"இந்த பொண்ணுக்கா அந்தப் பெட்டி?"

– மீண்டும் கேள்வி வந்தது, இன்ஸ்பெக்டரிடம் இருந்து.

."இல்லை சார்."

"இரண்டு பேருக்கும் இந்தப் பெட்டி சொந்தம் இல்லைன்னா, வானத்தில் இருந்தா வந்து விழுந்திச்சி?"

– கோபத்தில் வெடித்தார் இன்ஸ்பெக்டர்.

"இவன் இப்படி கேட்டா உண்மையைச் சொல்லமாட்டான்."

– என்றார், என் பின்னால் நின்ற ஏட்டு ரங்கசாமி.

"இன்னொரு பெட்டி இருக்குதே அது?"

"அது என்னுடையதுதான் சார்" – என்றேன், குரல் நடுங்க.

சப்-இன்ஸ்பெக்டர் நீபா என்னை பரிதாபமாய் பார்ப்பது போலிருந்தது.



"இரண்டு பெட்டியையும் ஸ்டேஷனுக்கு கொண்டு வந்திடுங்க நீபா. எனக்கு முக்கியமான வேலை ஒண்ணு இருக்குது. வரட்டுமா?"

– மல்லார்ந்து கிடந்த நதிராவை மீண்டும் ஒரு முறை பார்த்தேன். பார்வையை மறைத்தது கண்ணீர்.

'நான் ஏன் அழுகிறேன்?'

"வாய்யா போகலாம்."

– ஏட்டு ரங்கசாமி அதட்டினார்.

கண்ணீரை துடைத்துக்கொண்டு திரும்பினேன்.

என்னையே இமை மோதாமல் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் 'லாட்ஜ்' பெண்.

நான், இன்ஸ்பெக்டர் கதிரவன், ஏட்டு ரங்கசாமி, ஒரு காவலர் என நான்கு பேரும் இறங்கி கீழே வந்தோம். 'லாட்ஜ்' முன்னால் சின்னதாய் ஒரு கூட்டம் கூடியிருந்தது.

நாங்கள் காவல் ஜீப்பில் ஏறிக்கொள்ள– ஜீப் புறப்பட்டது. என் அருகே இருந்த ரங்கசாமி ஒரு கண்ணை மட்டும் என் மேல் வைத்திருந்தார்.

ஜீப் வேகம் எடுத்திருந்தது. கூடவே என் சிந்தனைகளும்!

'நான் கொலைகாரனா? சந்தர்ப்பமும், சூழ்நிலையும் என்னை தூக்கில் ஏற்றிவிடுமா? என் மனைவி செண்பகவல்லியை விட்டுவிட்டு சாகப் போகிறேனா? எனக்கு யாரும்...'

– திடீரென ஜீப் 'பிரேக்'கிட்டு நின்றது.

எதிரே சாலையில் இரண்டு ஆட்டோக்கள் உரசிக்கொண்டு நின்றன.

ஆட்டோ டிரைவர்கள் கீழே இறங்கி, சென்னை தமிழில் திட்டிக்கொண்டு இருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் கவனம் திசை திரும்ப, ரங்கசாமி 'பராக்கு' பார்க்க–

நான் வெளியே குதித்து ஓடத் தொடங்கினேன்.

# 9

ஜீப் நின்றதும் வெளியே பார்த்த நான், கண் இமைக்கும் நேரத்தில் குதித்து ஓடத் தொடங்கினேன் மின்னல் வேகத்தில். 'ஏய்' என்ற





ஏட்டு ரங்கசாமியின் அலறல் என் காதில் மெலிதாக கேட்டது. பொருட்படுத்தாமல் எதிர்திசை நோக்கி ஓடினேன்.

ஒரு கிழவன் என் மீது இடித்துக்கொண்டு கீழே விழுந்தான். கிழவன் திட்ட ஆரம்பிப்பதற்குள் சாலையின் எதிர் பக்கத்தை அடைந்திருந்தேன். இன்னும் வேகமாய் வெறி பிடித்தவன் போல் ஓடி, சட்டை காலரை பிடித்து இழுத்து அவனை நிறுத்தினேன்.

நான் இழுத்த இழுப்பில் திரும்பிய அந்த குறுந்தாடிக்காரன் என்னைப் பார்த்ததும் திகைத்துப் போனான். கொஞ்சமும் யோசிக்காமல் என் அடிவயிற்றில் ஓங்கி ஒரு குத்துவிட்டான்.

வயிற்றில் வலி பரவியது. இருந்தும் என் பிடியை விடவில்லை.

அவன் அடுத்த குத்து விடுவதற்குள்–

அவனை சேர்த்து இறுக்கிப் பிடித்தேன்.

உதறினான். திமிறினான். நான் விடவில்லை.

அதற்குள் இன்ஸ்பெக்டர் கதிரவனும், ஏட்டு ரங்கசாமியும் வந்து சேர்ந்திருந்தார்கள்.

"என்ன இது...?"

– என்று கேட்டார் கதிரவன், குழப்பமாய்.

"சார்... இவன்தான் நதிராவை கொலை செய்தவன்."

– என்றேன், பிடியை விடாமல்...

சில நிமிடங்கள் கரைந்த பின் –

நானும், குறுந்தாடிக்காரனும் ஜீப்பில் ஏற்றப்பட்டோம்.

ஏட்டு ரங்கசாமி என் மீது கவனமாய் இருக்க–

நான் குறுந்தாடிக்காரன் மீது கவனமாய் இருந்தேன்.

கொஞ்ச நேரத்தில் ஜீப் எங்களை போலீஸ் நிலையத்தில் உதிர்த்தது.

நானும், அந்த குறுந்தாடிக்காரனும் தனித்தனி அறையில் அடைக்கப்பட்டோம்.

'விடியட்டும்' என்று சொல்லிவிட்டு எல்லோரும் போய்விட்டார்கள்.

தனிமைப்பட்டேன். ரொம்ப நாட்களுக்கு பிறகு தனிமைப்பட்டேன்.

உறக்கம் வர மறுத்தது.

இரவும் கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்தது.

விடியட்டும் என்று காத்திருந்தேன்.

எனக்குத் தெரியாமலே விடிந்துவிட்டது.

போலீஸ்காரர் லத்தியால் சிறைக் கம்பியில் தட்டியதில் விழித்துக்கொண்டேன்.

கண்களை கசக்கியபடி எழுந்து உட்கார்ந்தேன்.

கதவைத் திறந்தார் போலீஸ்காரர்.

சைகையால் அழைத்தார்.

உத்தரவுக்கு கட்டுப்பட்டேன்... மவுனமாய்.

இயற்கை 'உபாதை'களின் விடுதலைக்குப்பின் மீண்டும் அறையில் அடைக்கப்பட்டேன்.

அந்த போலீஸ்காரர் ஒரு வார்த்தை பேசவில்லை.

நானும் பேசவில்லை.

சற்று நேரத்தில் இன்னொரு போலீஸ்காரர் வந்தார்.

– பெஞ்சு, மேசை, நாற்காலி நகரும் சத்தங்களும், ஓரிரு வார்த்தைகளும் காதில் விழுந்தன.

மவுனமாய் சுவரில் சரிந்திருந்தேன். என் மவுனத்தைக் கிழித்தது... அந்தச் சத்தம்.

காகிதம் பறக்கும் சத்தம். நிமிர்ந்து பார்த்தேன்.

காற்றில் வேகமாக வந்தது, என் முன்னால் வந்து விழுந்தது.

அது– இன்றைய பத்திரிகை.

எதிரில் நின்றுகொண்டிருந்தார் போலீஸ்காரர்.

அவர்தான் அதை உள்ளே எறிந்திருக்க வேண்டும்.

குரல் அங்கலாய்த்தது.

"எங்க பேரு வரமாட்டேங்குதுப்பா.

உங்க பேரு வந்துடுது."

– தரையில் கிடந்த பத்திரிகையை கையில் எடுத்துப் பார்த்தேன். முதல் பக்க செய்தியே முகத்தில் அறைந்தது.

**'அழகி மர்மக் கொலை .**

**தப்பியோடிய வாலிபர் கைது.'**

– என்று ஓடின வரிகள்.

செய்தியின் அருகில் நதிரா மல்லார்ந்த நிலையில் புகைப்படமாகி இருந்தாள்.

எரிச்சலுடன் பார்த்தேன்.



போலீஸ்காரர் திரும்பி என்னை முறைத்தார்.

"உங்களுக்கெல்லாம் திமிர்டா. இன்னும் ரெண்டு, மூணு நாள்ல திமிர் கரைஞ்சிடும்... இரு இரு."

– என்று உறுமினார்.

எனக்கு வாழ்க்கையே வெறுமையாய் போய்விட்டது போல் தோன்றியது.

'யார் இந்த நதிரா? எதற்காக சென்னை வந்து சாக வேண்டும்? தேன் குரலில் பேசிய அந்த சின்னப் பெண்ணை கொஞ்ச நேரத்தில் பேச்சு மூச்சு இல்லாமல் செய்துவிட்டானே? அந்த குறுந்தாடிக்காரன், செய்த கொலையை ஒப்புக்கொள்வானா? அவன் மறுத்துவிட்டால் நான்தான் தூக்குக் கயிற்றை முத்தமிட வேண்டுமா? முத்தம்... நதிரா தந்த முத்தம்... பாவிப் பெண்ணே அநியாயமாய் இறந்து என்னை மாட்ட வைத்துவிட்டாயே...?'

– சிந்திக்க சிந்திக்க பயம் அதிகரித்தது.

மனைவி செண்பகவல்லியின் முகம் கண்முன் வந்தது. கண்ணீருடன்.

எனக்கும் சுவரில் சாய்ந்து கண்ணீர் வடிக்க வேண்டும் என்று உள்ளுணர்வு சொன்னது.

இன்ஸ்பெக்டர் கதிரவனும், சப்-இன்ஸ்பெக்டர் நீபாவும் உள்ளே வந்தார்கள்.

அவர்கள் முகத்தில் சிந்தனை தேங்கியிருந்தது.

அடுத்த சில நிமிடங்களில்–

அவர்கள் முன் கொண்டுபோய் நிறுத்தப்பட்டேன்.

இருவர் பார்வையும் என் மீது விழுந்தது.

சற்று தள்ளி ஏட்டு ரங்கசாமி நின்றுகொண்டிருந்தார்.

என் நிலைமையைச் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு என்னுள் இருந்தது.

"சார்... நான் இந்தக் கொலையைச் செய்யல சார்... இதுக்கும் எனக்கும் எந்தவித..."

"கொஞ்சம் நிறுத்துங்க விஜயகுமார்."

– இன்ஸ்பெக்டர் கதிரவனின் குரல் கண்டிப்பாய் ஒலிக்க... நிறுத்தினேன்.

"விஜயகுமார்... முதல்ல என் பேச்சை நிதானமாய் கவனிச்சிட்டு அதுக்கப்புறம் பதிலை சொல்லுங்க."

"ம்..."– என்றேன்.

இன்ஸ்பெக்டர் திரும்பி அருகிலிருந்த சப்-இன்ஸ்பெக்டர் நீபா முகத்தை பார்த்து புன்னகைத்துவிட்டு என் பக்கம் திரும்பினார்.

"விஜயகுமார்... அந்தப் பொண்ணு பேரு நதிராதானே...?"

"அப்படித்தான் சொன்னாள்."

"நீங்களும், நதிராவும் ஒரே ரெயில்ல– ஒரே பெட்டியில– அருகருகே அமர்ந்து ஒண்ணா சென்னைக்கு வந்திருக்கீங்க. பிறகு ரெண்டு பேரும் எழும்பூர்ல ஒரே ஆட்டோவில் ஏறி, சென்டிரல் பக்கத்தில் இருக்கிற லாட்ஜுக்கு போயிருக்கீங்க. திருநெல்வேலி டவுன்ல பக்கத்து பக்கத்து வீட்ல குடியிருக்கிறதா முகவரி கொடுத்திருக்கீங்க. பக்கத்து பக்கத்து அறைல தங்கி இருக்கீங்க. ஒண்ணா உட்கார்ந்து சாப்பிட்டிருக்கீங்க... சீட்டு விளையாடி இருக்கீங்க. இதெல்லாம் விசாரிச்சி தெரிஞ்சிக்கிடுறதுக்கு எனக்கு ஒண்ணும் அதிக நேரம் தேவைப்படல."

"சார்... வந்து..."

"இடையில் பேசாம கேளுங்க. நதிரா, கை பெட்டின்னு நீங்க சொன்னதுல கடத்தல் தங்கமும், பிரவுன் சுகரும் இருக்குது. நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து கடத்தல் தொழில் பண்ணுறவங்க. உங்களுக்குள் ஏற்பட்ட பங்கு தகராறில் நதிராவை நீங்க குத்தி கொலை பண்ணிட்டீங்க. கொலை செய்த கத்தியை எங்கோ சாக்கடையில வீசிட்டீங்க. அவசரத்துல பெட்டியை எடுக்க முடியல. தப்பி ஓடும்போது எதிர்பாராம ஏட்டுகிட்ட மாட்டிக்கிட்டீங்க... சரிதானா?"

எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. யாரோ எதிர்பாராத தருணத்தில் திடீரென்று நெத்தியடியாய் அடித்தது போலிருந்தது.

தலையைச் சுற்றுவதுபோல் தெரிந்தது.

கண்முன் இருட்டு வந்தது.

யாரோ வலுக்கட்டாயமாக என்னை எமலோகத்திற்கு அனுப்ப தீர்மானித்துவிட்டது மாதிரி இருந்தது.

அந்தக் காலை நேரத்திலும் வியர்த்தது.

"என்ன விஜயகுமார்... பேச்சையே காணோம்? அத்தனை உண்மைகளையும் ரொம்ப சரியா சொன்னதும் திகைச்சி போயிட்டீங்களா?"

"சார்... நீங்க தப்பா புரிஞ்சிக்கிட்டீங்க. அந்தப் பொண்ணுக்கும், எனக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது. நான் சொல்றது சத்தியமான



உண்மை."

– என் பேச்சுக்கு இன்ஸ்பெக்டர் கதிரவன் வாய்விட்டுச் சிரித்தார்.

அவர் சிரித்த சிரிப்பு என்னை ஏளனம் செய்வது போலிருந்தது. மனதுக்குள் கோபம் பொங்கியது.

சப்-இன்ஸ்பெக்டர் நீபாவின் பார்வை என் கண்களை ஊடுருவியது.

இன்ஸ்பெக்டரோ ஏற்ற இறக்கத்தோடு வசனம் பேசினார்.

"எது உண்மை, எது பொய் விஜயகுமார்...? உங்க பெட்டியில் அரை அடி நீள கத்தி இருந்ததே... அது பொய்யா? அறையில் ரத்தக்கறையோடு உங்க கைரேகை இருக்குதே... அது பொய்யா? செத்துக் கிடந்த நதிரா உடம்புல இருந்த லுங்கியும், சட்டையும் உங்களுடையது. அது பொய்யா? எது உண்மை...! எது பொய்...? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்களேன்."

– கேள்விகளை வீசிவிட்டு என்னைப் பார்த்த பார்வையில் கேலி இருந்தது.

விளையாட்டாய் நடந்த அத்தனையும் திரும்பி எனக்கு எதிரணியில் நிற்பதைப் பார்த்ததும் அடிவயிற்றில் பயம் பரவியது.

வெட்கப்படாமல்...

கூச்சப்படாமல்...

ஆரம்பத்திலிருந்து அத்தனையும் சொல்லிவிட முடிவு செய்தேன்.

பேசத் தொடங்குவதற்கு முன் –

ஒரு முறை உதடுகளை ஈரப்படுத்திக்கொண்டேன்.

## 10

ஒரு தடவை சப்-இன்ஸ்பெக்டர் நீபாவின் கண்களை நேருக்கு நேர் பார்த்தேன்.

அந்தக் கண்களில் இரக்கம் இல்லை.

திரும்பி இன்ஸ்பெக்டரை பார்த்து பேச ஆரம்பித்தேன்.

"சார்... நான் ஆரம்பத்தில் இருந்தே நடந்ததைச் சொல்லிடுறேன்."

"பொய் கலக்காமல்..."

– என்றாள் சப்-இன்ஸ்பெக்டர் நீபா, இடையில் புகுந்து.

"பொய்யில்லை... பொய்யில்லை, நிஜம்" என்று ஆரம்பித்து–

முதல் அத்தியாயத்தில் தொடங்கி நதிராவின் சந்திப்பு, காஷித மிரட்டல், ஆட்டோ பயணம், சாவி இல்லாத பூட்டு, லுங்கி– சட்டை தானம், கத்தி மிரட்டல், சேட்டாட்டம், சூட்கேஸ் தங்கம், திடீர் முத்தம், கடைசி அணைப்பு, பிசுபிசுப்பாய் ரத்தம், குறுந்தாடிக்காரனை விரட்டியது, ஏட்டு ரங்கசாமியிடம் சிக்கியது வரை– வரிசை பிறழாமல் என் சங்கடங்களை சொல்லி முடித்தேன்.

மனதிலிருந்த பாரத்தை இறக்கி வைத்த உணர்வு எனக்கு ஏற்பட்டது.

கதிரவனும், நீபாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

நீபாவின் கண்களில் முழுதாய் நம்பிக்கை வந்திருந்தது.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில்–

குறுந்தாடிக்காரனை இழுத்து வந்து முன்னால் நிறுத்தினார்கள்.

அவன் யாரையும், எதையும் தெரியாது என்று சத்தியம் செய்தான்.

இன்ஸ்பெக்டர் கதிரவன் கண் அசைக்க– குறுந்தாடிக்காரனை ரொம்பவும் சாந்தமாய் உள் அறைக்கு அழைத்துச் சென்றார் ஏட்டு ரங்கசாமி.

இரண்டு, மூன்று நிமிடங்கள் கரைந்த பின்–

"அம்மா."

– உள்ளே இருந்து அலறல் சத்தம் வந்தது.

தொடர்ந்து சில அலறல்களும், முனகல்களும் கேட்டன.

என்னுடைய இதயம் 'திக்... திக்'கென்று அடித்துக்கொண்டது.

கதிரவன்– நீபாவின் முகத்திலோ எந்தவித சலனமும் இல்லை.

அடுத்த சில நிமிடங்கள் சங்கடமாய் கழிந்தன.

உள்ளே இருந்து ஏட்டு ரங்கசாமியும், குறுந்தாடிக்காரனும் வந்தார்கள்.

அவன் நடையில் சிரமம் தெரிந்தது.

கீழ் உதட்டின் ஓரம் சிவந்து சற்று வீங்கி இருந்தது.

நிற்க முடியாமல்–

தரையில் மண்டியிட்டு அமர்ந்தான்.



சைகையால் தண்ணீர் கேட்டான்.

"தண்ணீ குடுப்பா."

– இன்ஸ்பெக்டர் கதிரவன் குரலுக்கு போலீஸ்காரர் ஒருவர் ஓடிப்போய் தண்ணீர் கொண்டுவந்தார். அவசரமாய் தண்ணீரை வாங்கி சட்டை நனைய குடித்தான். தாடியை துடைத்து தன்னை ஆசுவாசப்படுத்தினான்.

பயத்துடன் நிமிர்ந்து இன்ஸ்பெக்டரை பார்த்தான்.

"ம்... சொல்லு."

– என்றார் அதட்டும் குரலில்.

நடுக்கத்துடன் சொல்ல ஆரம்பித்தான், குறுந்தாடிக்காரன்.

"என் பேரு மூர்த்தி. தங்கம், பிரவுன் சுகர், கஞ்சா கடத்துறதுதான் என் தொழில். லாட்ஜ்ல எடுத்த பெட்டி என்னோடதுதான். நாகர்கோவில்ல இருந்து திருநெல்வேலிக்கு பஸ்சில் வந்துகிட்டிருந்தேன். அங்க ஒரு நபரை சந்திச்சிட்டு தூத்துக்குடி போறதா திட்டம். பெட்டியை அக்கறை இல்லாத மாதிரி கொஞ்சம் தூரமா வைச்சிகிட்டு பயணம் செய்றதுதான் என் வழக்கம்.

பஸ் திருநெல்வேலி புது பஸ் ஸ்டாண்டுக்குள் நுழைஞ்சது. லாட்ஜ்ல செத்துப் போச்சிதே அந்தப் பொண்ணு திடீர்னு என் பெட்டியை தூக்கிகிட்டு கீழே இறங்கி ஓட ஆரம்பிச்சிடிச்சி. எனக்கு அவசரத்தில என்ன செய்றதுன்னே தெரியல. பின்னாலே ஓடினேன். அவ ஜங்ஷன் போற பஸ்ல ஏறிட்டா. நான் ஆட்டோ பிடிச்சி பின்னாலே துரத்திக்கிட்டே போனேன்.

அந்தப் பொண்ணு பஸ்சில் இருந்து இறங்கி ரெயில்வே ஸ்டேஷனை நோக்கி ஓட ஆரம்பிச்சிடிச்சி... என் பெட்டியோட. ஒரு பொண்ணை விரட்டிக்கிட்டு நடுரோட்டில் ஓடினா போலீஸ் பிடிச்சிக்கும்னு பயந்து நடந்தே போனேன். அவ அந்த நேரம் புறப்பட்டுக்கிட்டு இருந்த கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ்ல ஓடிப் போயி ஏறிட்டா. நானும் வேற வழியில்லாம ஒரு பெட்டியில ஏறிக்கிட்டேன். கோவில்பட்டியில வண்டி நின்னதும், அந்தப் பொண்ணு இருந்த பெட்டிக்கு போனேன். அவ இறங்கி அடுத்த பெட்டியில போய் ஏறிக்கிட்டா. நானும் பின்னாலே போனேன்."

– சொல்லிக்கொண்டிருந்தவன் பேச்சை நிறுத்தி, என்னை ஒரு முறை பார்த்தான். பின் பேச்சை தொடர்ந்தான்.

"அந்தப் பொண்ணு நேரே போயி இவரோட பக்கத்து இருக்கையில

உட்கார்ந்திடுச்சு. கொஞ்ச நேரத்தில ரெண்டு பேரும் ரொம்பவும் நெருக்கமாயிட்டாங்க. எனக்கு எரிச்சல் எரிச்சலா வந்திச்சி. இவங்க ரெண்டு பேரையும் பிரிக்கலேன்னா என்னால என் பெட்டியை எடுக்க முடியாது. ஒரு எச்சரிக்கை கடிதம் எழுதி இவர் பார்வையில வெச்சேன். சென்னை வரும் மட்டும் காத்திருந்தேன். அங்கேயும் எனக்கு ஏமாற்றம்தான் கிடைச்சுது.

இரண்டு பேரும் சேர்ந்து ஆட்டோவுல ஏறி சேர்ந்தே தப்பிச்சிட்டாங்க. ஆட்டோவில் பின்தொடர்ந்து போனேன். ஒரே லாட்ஜ்ல தங்க அறை போட்டுட்டாங்க. கடைசியில பெட்டி பறிபோயிடுமோன்னு எனக்கு பயம் வந்திடிச்சி. லாட்ஜ்ல இவரோட பெட்டியில கத்தி வெச்சி மிரட்டினேன். பலன் இல்லை. ராத்திரி பெட்டியை தட்டிட்டு போயிடலாம்னு அந்த பொண்ணோட அறைக்குப் போனேன்."

– பேச்சை நிறுத்திவிட்டு, தண்ணீருக்காய் சைகை செய்தான்.

தொடர்ந்து சப்–இன்ஸ்பெக்டர் நீபா சைகை செய்தாள்.

ஒரு போலீஸ்காரர் தண்ணீரோடு வந்தார்.

என் இதயம் வேகமாகி இருந்தது.

தண்ணீரை வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு பேச்சை தொடர்ந்தான்.

"அந்த அறையில அந்தப் பொண்ணும் இல்லை. அவ பெட்டியும் இல்லை. இவரோட அறையை எட்டிப் பார்த்தேன். இவர் கையெல்லாம் ரத்தத்தோடு நின்னுகிட்டிருந்தார்."

– பேச்சு இடையில் அறுந்தது.

குறுந்தாடிக்காரன் பார்வை என் மேல் வந்து நிலைத்தது.

எல்லோருடைய பார்வையும் எனது முகத்தில் பதிந்திருந்தது.

அவசரமாய் வியர்த்திருந்தேன்.

மூச்சு திணறுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

"சொல்லுப்பா."

– என்றாள் சப்–இன்ஸ்பெக்டர், குறுந்தாடிக்காரனைப் பார்த்து...

அவன் மீண்டும் சொல்ல ஆரம்பித்தான்.

"ஆமாம். இவர் கையெல்லாம் ரத்தத்தோடு நின்னுக்கிட்டிருந்தாரு. இவர் காலடியில அந்தப் பொண்ணு முதுகெல்லாம் ரத்தமா விழுந்து கிடந்திச்சி. எனக்கு பயம் வந்திடிச்சி. ஓட ஆரம்பிச்சேன். இவரு என்னை துரத்த ஆரம்பிச்சிட்டாரு... நான் தப்பிச்சிட்டேன். ஹோட்டர் பக்கத்துல இருக்கிற என் நண்பன்கிட்ட நடந்த விஷயத்தை



சொல்லிட்டு திரும்பி வரும்போது, இவர் எதிர்பாராம என்னை வந்து பிடிச்சிட்டாரு... அவ்வளவுதான் நடந்தது. எனக்கு அந்தப் பொண்ணு யாருன்னே தெரியாது. சத்தியமா நான் அந்தப் பொண்ணை கொலை செய்யலை."

– அவனுடைய குரல் நடுங்கியது.

பேச்சை முடித்திருந்தான்.

அவன் கண்களில் உண்மை இருப்பது போலிருந்தது.

'குறுந்தாடி கொலை செய்யவில்லை என்றால் நதிராவை கொன்றது யார்...?'

"என்னப்பா நீயும் கொலை பண்ணலைன்னு சொல்றே... விஜயகுமாரும் கொலை பண்ணலன்னு சொல்றான். பின்ன யார்தாம்பா கொலை பண்ணினது? அந்த லாட்ஜ் கிழவர் பண்ணினாலும் பண்ணி இருப்பாரோ?"

– என்று கேட்ட ஏட்டு ரங்கசாமி, ஏதோ பெரிய ஹாஸ்யத்தை சொல்லிவிட்டது போல சத்தமாய் சிரித்தார்.

இன்ஸ்பெக்டர் முறைப்பில்–

சிரிப்பு சட்டென்று உறைந்தது.

"உன் நண்பனோட முகவரியைச் சொல்லு."

– சப்–இன்ஸ்பெக்டர் நீபா கேள்விக்கு குறுந்தாடிக்காரன் பதில் சொன்னான்.

நீபாவின் அடுத்த கேள்வி என்னிடம் வந்தது.

அதில் நிறைய சந்தேகம்.

"உங்க பேரு உண்மையிலேயே விஜயகுமார்தானா?"

– அதிர்ந்தேன்.

இருந்தும் நிதானமாய் பதில் சொன்னேன்.

"என்னோட ஆபீஸ் திருநெல்வேலி. இங்க அண்ணாசாலையில் தபால் அலுவலகம் இருக்குது. அதிகாரி மும்பை போயிருக்கிறார். அவரோட பி.ஏ. சுசித்ராவை கேட்டா என்னைப் பற்றி எல்லா விபரமும் தெரியும்."

– கொஞ்சம் யோசித்தவள், தொலைபேசி எண்ணை கேட்டாள்.

சொன்னேன்.

'டயல்' செய்தாள்.

விசித்ரா இணைப்பில் கிடைத்தாள்.

முப்பது நிமிடத்தில் வருவதாகச் சொன்னாள்.

'ரிசீவர்' அதனிடத்தில் வைக்கப்பட்டது.

மீண்டும் குறுந்தாடிக்காரனும், நானும் தனித்தனி அறைகளில் அடைக்கப்பட்டோம்.

ஏட்டு ரங்கசாமி தனது இருக்கையில் அமர்ந்து பெரிதாய் கொட்டாவி விட்டார்.

கதிரவனும், நீபாவும் நேருக்கு நேர் அமர்ந்து எதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

நான் விசித்ராவுக்காக காத்திருந்தேன்.

என் நம்பிக்கை நட்சத்திரம், கரை தெரியாமல் தத்தளிக்கும் மரக்கலமான – எனக்கு கலங்கரை விளக்கம்...

இன்னும் நிறைய உவமைகள் சொல்லலாம்.

முப்பது நிமிடத்தில் வருவேன் என்று சொன்ன சுசித்திரா அறுபது நிமிடமாகியும் வரவில்லை.

எனது மனம் கலவரப்பட்டது. கலங்கியது.

'வருவாளா... அவள் வருவாளா?'

வெளியே ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில்–

கண்களில் குளிர் கண்ணாடியுடன் சுசித்ரா உள்ளே நுழைந்தாள்.

இன்ஸ்பெக்டர் கதிரவனுக்கு வணக்கம் சொன்னாள்.

சுட்டிக்காட்டிய இருக்கையில் மிடுக்காய் அமர்ந்தாள்.

என் அறை இருந்த திசைக்கு அவள் கண்களைத் திருப்பவில்லை.

இன்ஸ்பெக்டர் சொன்னதை எல்லாம் தலையசைத்து கேட்டாள், தோரணையில்.

திரும்பி–

நான் இருந்த சிறை அறையைப் பார்த்தாள்.

சாவகாசமாய் எழுந்து என் அருகே வந்தாள்.

குளிர் கண்ணாடியை கழற்றிவிட்டு, என்னை கூர்ந்து பார்த்தாள்.

முகத்தில் வியப்பை வரவழைத்தாள்.

இன்ஸ்பெக்டரிடம் திரும்பி–

"இவரை எனக்குத் தெரியாது"

– என்றாள் அழுத்தமாய்.



# 11

**வி**சித்ரா என்னை தெரியாது என்று சொன்ன அடுத்த விநாடியே அவள் கழுத்தை நான் முறித்திருக்க வேண்டும்.

இருவருக்கும் இடையில் வலுவான இரும்புக் கம்பிகள். 'அட சண்டாளி' என்று நீளமாய்திட்டி இருக்கலாம். பசை போட்டு ஒட்டியது போல் உதடுகள் கொஞ்சமும் அசையாமல் இருந்தன.

'ஏன் இப்படி பொய் சொல்லிவிட்டாள்... என்னிடம் இழைந்து இழைந்து பேசிய விசித்ராவா இது...? எதற்காக முழுதாய் ஒரு பொய் சொல்ல வேண்டும்?'

எனக்கு சிறிதும் புரியவில்லை. மனதுக்குள் நிறைய குழப்பமாய் இருந்தது.

அவசரமாய் திரும்பி, மிடுக்காய் நடந்து இன்ஸ்பெக்டர் கதிரவன் முன்னால் போய் நின்றாள் விசித்ரா. ஏதோ சொன்னாள். வருத்தப்படுவது போல முகத்தை வைத்துக்கொண்டு கதிரவன் பதில் சொன்னார்.

இவள் சின்னதாய் ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு வாசலை நோக்கி நடந்தாள்.

வாசலை கடக்கும் முன் திரும்பி என்னை ஒரு முறை பார்த்தாள். அந்தப் பார்வையில் அலட்சியம் தெரிந்தது.

ஆட்டோ புறப்படும் சத்தம் கேட்டது.

'தென்றலாய் எதிர்பார்த்தேன். புயலாய் வந்து வீழ்த்திவிட்டு போய்விட்டாள். இனி என்ன செய்வது? சிறையில் இருந்து உடனே வெளியே போகவேண்டும் போல் இருக்கிறதே? ம்... விசித்ரா இப்படி அதிரடியாய் பொய் சொல்லிவிட்டுப் போன பிறகு இன்ஸ்பெக்டர் என்னை நம்புவாரா? நிச்சயம் நம்பமாட்டார்.

உண்மையைச் சொல் என்று மிரட்டுவார். கொலையை நீதானே செய்தாய் என்று துளைப்பார். நான் நதிராவை கொலை செய்யவில்லை என்று உண்மையைச் சொன்னால், ஏட்டு ரங்கசாமியை விட்டு அடிப்பார். போலீஸ் அடி... பூட்ஸ் கால் உதை...' நினைக்கும்போதே உடம்பு மெலிதாய் நடுங்கியது.

யாரும் என்னிடம் வரவில்லை.

கொஞ்ச நேரம் காத்திருந்தேன்.

கற்பனை செய்து பார்த்தேன்– விழப்போகும் போலீஸ் அடி.

உதைகளை.

எனக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.

என் கண் வீச்சுக்கு அப்பால் குழுமி நின்று ஏதோ பேசுவது போல் எனக்குப்பட்டது.

எனக்கு எதிரே சதித்திட்டம் ஒன்று உருவாகிறது என்று–

என் உள் மனம் புலம்பியது.

அடுத்த ஐந்தாவது நிமிடம்–

அவசர நடை நடந்து இன்ஸ்பெக்டர் கதிரவன்– போலீஸ் நிலையத்தைவிட்டு வெளியேறினார்.

போகும் முன் திரும்பி என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு நகர்ந்தார்.

அவருக்கு பின்னால் ஓட்டம் கலந்த நடையாய் விசுவாச நாய்க்குட்டி போல நீபா.

அவளும் திரும்பி என்னை ஒரு முறை பார்த்துவிட்டுத்தான் சென்றாள்.

முன்னது 'வந்து கவனிக்கிறேன்' என்றது.

கோபமும், எரிச்சலும் சமவிகிதமாய் கலந்திருந்தன.

பின்னது– ஏக்கம் கலந்த காதல் பார்வை என்று பொய் சொல்ல நான் தயாரில்லை.

நீபா பார்த்தது உப்பு சப்பில்லாத வெற்றுப் பார்வை.

நான் பார்வைகளுக்கு விளக்கம் தேடிக்கொண்டு இருக்கும்போதே எனக்கு நேர் எதிரில் நாற்காலியை இழுத்துபோட்டு ஏட்டு ரங்கசாமி அமர்ந்துவிட்டார்.

– அதற்குள் போலீஸ்காரர் ஒருவர் பொட்டலத்துடன் வந்து அவரது அருகில் அமர்ந்தார்.

பொட்டலம் பிரிக்கப்பட்டது.

வெங்காய பக்கோடா.

சுவாரசியமாய் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

எனக்கு அந்த விநாடிதான் ஞாபகம் வந்தது.

'நேற்று இரவில் இருந்தே நான் சாப்பிடவில்லை.'

எனக்கு அழுகை வரும்போல் இருந்தது.

அவர்களோ என்னைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல்–

அத்தனை பற்களிலும் படும்படி பக்கோடாவை மென்றுகொண்டே



இருந்தார்கள்.

அதுவரை பசி என்று சொல்லாத வயிறு, இப்பொழுது பசி பசி என்று கூப்பாடு போட்டது.

தூரத்து பக்கோடாவுக்கு வீணாய் உமிழ்நீர் சுரந்தது.

மீண்டும் என் இக்கட்டான நிலை நினைவுக்கு வர–

அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

'ஆண் பிள்ளை அழலாமா...? அழலாம்.

அடுத்தவருக்கு தெரியாமல் அழ வேண்டும்.'

– கவிழ்ந்து தரை பார்த்து அமர்ந்தேன்.

கண்ணீர் கன்னத்தில் கொஞ்சம் நனைத்து, தரையையும் நனைத்தது.

கடைசி அத்தியாயத்தில் தூங்க வேண்டாமென்று நினைத்தாலும் தூங்கிப் போனேன்.

தூக்கி வாரிப்போட்டது போல் விழித்துக்கொண்டேன்.

வெளியே ஜீப்பின் உறுமல் கேட்டது.

கண்களைத் துடைத்தபடி நிமிர்ந்து அமர்ந்தேன்.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில்–

புதிதாய் இரண்டு பெண்களும், இன்ஸ்பெக்டர் கதிரவனும் தெரிந்தார்கள்.

பின்னால் சப்-இன்ஸ்பெக்டர் நீபா.

முன்னால் வந்துகொண்டிருந்த பெண்– உள்ளே வர சற்று தயக்கம் காட்டினாள்.

இன்ஸ்பெக்டரின் கரம் அந்தப் பெண்ணை முரட்டுத்தனமாய் தள்ளியது.

அவள் தடுமாறி ஒரு நாற்காலியில் மோதி கீழே விழுந்தாள்.

கையிலிருந்த பை சற்று தள்ளிப்போய் விழுந்தது.

அவசரமாய் எடுத்துக்கொண்டாள்.

அவளுக்கு வயது நாற்பத்தைந்து இருக்கும்.

சின்ன வயதில் அழகாய் இருந்திருப்பாள்.

பெரிய பொட்டு. வெற்றிலையில் சிவந்த உதடுகள்.

அவள் முகத்தில் 'சிவப்பு விளக்கு' எரிந்தது.

சப்-இன்ஸ்பெக்டர் நீபா பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இளம்பெண்ணுக்கு இருபது வயதுக்கு மேல் சொல்ல எந்த

சாத்தியமுமில்லை.

கண்களில் நிறைய பயம். முந்தானை விலகி இருப்பது தெரியாமல் நின்றுகொண்டிருந்தாள்.

"ரங்கசாமி... மிஸ்டர் விஜயகுமாரை அழைச்சிட்டு வாங்க."

'என்ன இது... மிஸ்டர் விஜயகுமாரா?'

– ஆச்சரியம் உடனே வந்து எட்டிப் பார்த்தது.

ரங்கசாமி வந்து கதவைத் திறக்க–

வெளியே வந்தேன்.

"உட்காருங்க மிஸ்டர் விஜயகுமார்."

– நாற்காலியை நோக்கி கையை நீட்டினார் இன்ஸ்பெக்டர் கதிரவன்.

தயக்கத்துடன் உட்கார்ந்தேன்.

"காலையில டிபன் சாப்பிட்டீங்களா...?"

– குரலில் பரிவு மிதந்தது.

"இல்லை"– என்றேன் குழப்பத்துடன்.

"பொன்னுசாமி."

– 'வெங்காய பக்கோடா' போலீஸ்காரர் நடுக்கத்துடன் முன்னால் வந்து நின்றார்.

"நீங்க மூணு நேரம் தினமும் சாப்பிடுறீங்கல்ல... உள்ளே இருக்கிறவங்களுக்கும் பசிக்கும்னு ஏன் உங்களுக்கு தோணல? முட்டாளா போயிட்டீங்க... ம்..."

– போலீஸ்காரர் தலையை சொறிந்தார்.

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திரும்பி ஏட்டைப் பார்த்தார். அவரோ வேறு திசைக்கு முகத்தை திருப்பிக்கொண்டார்.

"சாரி மிஸ்டர் விஜயகுமார்."

– இன்ஸ்பெக்டரும் வருத்தம் தெரிவித்தார், வருத்தமான குரலில்.

"பரவாயில்லை."

– என்றேன் திகைப்புடன்.

"பொன்னுசாமி... முதல்ல ஓட்டலுக்கு போயி இரண்டு மசால் தோசை, நாலு இட்லி, இரண்டு உளுந்தம் வடை வாங்கிட்டு வா."

– எனக்கு மீண்டும் பசித்தது.

போலீஸ்காரர் கோவில் மாடாய் தலையாட்டிவிட்டு வெளியேறினார்.



"மிஸ்டர் விஜயகுமார்... ஒரு தப்பும் செய்யாத உங்களை ரொம்ப தொந்தரவு செய்துட்டோம். அதற்கு முதல்ல நீங்க என்னை மன்னிக்கணும்."

– எனக்கு அவர் பேசியது ஒன்றும் புரியவில்லை.

'இதென்ன விசித்திர திருப்பம்... என்னை கேலி செய்கிறாரோ...?'

– சந்தேகத்துடன் அவரைப் பார்த்தேன்.

"என்னடா கதை திடீர்னு 'டிராக்' மாறுதுன்னு பாக்கிறீங்களா...? அதுக்கு காரணம் இருக்கு. ஏய் பொண்ணு... இங்கே வா."

– அந்த 'இருபது வயது' முன்னால் வந்தது, பயத்துடன்.

"உன் பேரு என்ன...?"

"மல்லிகா."

"உங்க வீடு எங்கே இருக்கு...?"

"சூளைமேடு."

"இவளோடு எதுக்காக புறப்பட்டே...?"

"எனக்கு அம்மா இல்லீங்க. எங்க அப்பா தினமும் குடிச்சிட்டு வந்து அடிப்பாருங்க. ஆட்டோ வைச்சிருக்கிற சண்முகத்துக்கு என்னை கல்யாணம் கட்டித் தர்றதா சத்தியம் செய்திட்டாருங்க. சண்முகமும் சரியான குடிகாரருங்க.

இது எனக்கு கொஞ்சமும் புடிக்கலீங்க. வீட்டை விட்டே ஓடிடலாம்னு முடிவு பண்ணினேங்க. இந்த அம்மா, 'மும்பைக்கு என்னோடு வா, கைநிறைய சம்பாதிக்கலாம்'னு சொல்லிச்சிங்க. அதனால இந்த அம்மாவோடு புறப்பட்டுட்டேன்."

– என்று அந்த 'இருபது' ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

'இவள் இதுவரை சொன்னதற்கும், நதிரா கொலைக்கும் என்ன சம்மந்தம்...?'

சத்தியமாய் எனக்கு எதுவும் புரியவில்லை!

– அடுத்து சற்று தள்ளி நின்ற பெரிய பொட்டுக்காரியை அழைத்தார்.

"இங்க வாம்மா."

– அந்த 'பெரிய பொட்டு' தயங்கி தயங்கி முன்னால் வந்து நின்றது.

"ரங்கசாமி... அவ கையில இருக்கிற பையைப் பிடுங்கி மேசை மேல கொட்டுய்யா..."

– அவன் கையிலிருந்த பையை அவசரமாய் பிடுங்கி, மேசை மீது கவிழ்த்தார்.

துணிகள்... துணிகள்... துணிகள். அவைகளுக்கு இடையில் –

கொஞ்சம் பணம்... காய்ந்த ரத்தத்துடன் –

நீளமாய் கத்தி.

எனக்கு ஏதோ புரிந்தது.

இன்ஸ்பெக்டர் மிரட்டல் தொனியில் கேள்விகளை அடுக்கினார்.

"உன் பேரு... உன்னோட தொழில்... எதுக்காக நதிராவை கொலை செய்தே... அத்தனையும் வரிசையா சொல்லு."

– பெரிய பொட்டுக்காரி நிதானமாய் சொல்ல ஆரம்பித்தாள்.

"என் பேரு மங்களம். இங்கே இருந்து வேலைக்குன்னு பொண்ணுங்களை அழைச்சிட்டு போயி, மும்பை சிவப்பு விளக்கு பகுதி சோனாப்பூர்ல விலை பேசி வித்திடுவேன். பொண்ணுங்களுக்காக தமிழ்நாடு முழுவதும் சுத்தி வருவேன். ஊருக்கொரு வேஷம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்த நதிரா, சித்தியோட கொடுமையில சங்கடப்பட்டுக்கிட்டு இருந்தா. மும்பையில வேலை வாங்கி தர்றேன்னு ஏமாத்தி, ரெயிலுக்காக நாகர்கோவிலுக்கு அழைச்சிட்டு வந்தேன். என்னோட தவறான நோக்கம் பாதி வழியில நதிராவுக்கு தெரிஞ்சி போச்சி. என்னை ஏமாத்திட்டு தப்பிச்சி போயிட்டா"

– என்று சொல்லி நிறுத்தியவள், கதிரவனின் "ம்" என்ற சொல்லுக்கு தொடர்ந்தாள்.

"நாகர்கோவில்ல இருந்து பஸ்ல திருநெல்வேலி வந்து ரெயில்ல ஏறி சென்னை வந்து சேர்ந்துட்டா. எந்தப் பெண்ணும் இதுவரை என்னிடம் ஏமாந்திருக்காங்களே தவிர, என்னை ஏமாத்தினதில்லை. நதிராகிட்ட ஏமாந்தது எனக்கு ரொம்ப கோபத்தை ஏற்படுத்திடுச்சி.

நான் சென்னை வந்ததும்– நதிரா அடுத்த லாட்ஜ்ல இருக்கிற தகவல் எங்க ஆட்கள் மூலம் கிடைச்சுது. லாட்ஜ்க்கு போயி என்னோடு வான்னு நதிராவை கூப்பிட்டேன். அவ வர முடியாதுன்னு சொன்னதோடு, என்னை போலீஸ்ல பிடிச்சிச் குடுக்காம விட மாட்டேன்னு சொன்னா. என்னோட தொழிலையே கெடுத்துடுவாங்கிற கோபத்தில் கத்தியால குத்திட்டு ஓடி வந்துட்டேன். இன்னிக்கு தாதர் எக்ஸ்பிரஸ்ல நாலு சின்ன பொண்ணுங்களோடு மும்பைக்கு போறதா இருந்தேன். அதுல ஒருத்திதான் இந்த மல்லிகா. மும்பை போறதுக்குள்ள உங்ககிட்ட மாட்டிக்கிட்டேன்."



## இதயம் பேசுகிறது

# அருமை

ராஜேஷ்குமாரின் 'பனி நிலவு' நாவலில், செண்பகவல்லியின் துயரமான 'பிளாஷ்பேக்'கை படித்தேன். அதிலிருந்து மீள ஒன்றிரண்டு நாட்கள் ஆகியது.

**சுதா குமரவேல், சோழிங்கநல்லூர்.**

அருமையான நாவல். மார்கழி பனியையும் பொருட்படுத்தாமல் நிலவு போல் வந்த செண்பகவல்லி என்னை பரவசப்படுத்திவிட்டார்.

**சுகந்தி நாராயண், வியாசர்பாடி.**

'பனி நிலவு' நாவல் பவுர்ணமி போல் பூரணமானது.

**ஆர்.ஆர். உமா, செல்வமருதூர்.**

வாசகர் நெஞ்சம் பனி போல் உருகும்படி, குடும்ப கதையை துப்பறியும் நாவலாக விறுவிறுப்புடன் கொண்டு சென்றது பாராட்டுக்குரியது.

**எஸ்.விஜயலட்சுமி, ஆதம்பாக்கம்.**

ராஜேஷ்குமாரின் நாவல் சுவை என்றால் சின்னச் சின்ன செய்திகள் சுவையோ சுவை.

**கே.ஏ.நமசிவாயம், பெங்களூர்.**

நாவல் படுவிறுவிறுப்பாக சென்று, முடிவில் மனதை நெகிழ வைத்துவிட்டது.

**த.சத்தியநாராயணன், அயன்புரம்.**

மார்கழிக்கு பொருத்தமான 'பனிநிலவு' நாவலைப் படித்து இதயம் குளிர்ந்தது.

**அ.யாழினி பர்வதம், சென்னை.**

'பனி நிலவு' மிகவும் அருமை.

**சிவக்குமார், ஓரப்பம்.**

கதாபாத்திரங்கள் மிகவும் விறுவிறுப்புடன் நடைபோட்டன.

**எஸ்.எல். பிச்சைமுத்து, சிங்கப்பெருமாள் கோவில்.**

ஆரம்பத்திலே விழுந்த முடிச்சு, படிக்க படிக்க... பனி விலக விலக... பனிச் நிலவாய் உள்ளம் பிரகாசமானது.

**மோகனா செல்வகணேசன், சோழிங்கநல்லூர்.**

நாவலைப் படித்து உங்கள் கருத்தை எழுதி அனுப்புங்கள்.

முகவரி: **இதயம் பேசுகிறது, 'ராணி முத்து', சென்னை– 600 007.**

# படுக்கை அறையில்...

படுக்கை அறையில் வெளிர் நீல நிற வர்ணம் அடித்தால் நிம்மதியாக தூக்கம் வரும். சமையல் அறைக்கு மஞ்சள் வர்ணம் நல்லது.

– என்று சொல்லிவிட்டு, 'கல்லுளிமங்கன்' போல நின்றாள் பெரிய பொட்டு.

மேகம் தொலைந்த நீலவானமாய் என் இதயம் குழப்பமில்லாமல்...

புரிந்தது. எனக்கு எல்லாம் புரிந்தது.

திருநெல்வேலியில் இறங்கிய நதிரா, தனது பெட்டிக்கு பதிலாக- குறுந்தாடிக்காரன் பெட்டியை மாற்றி எடுத்துக்கொண்டு இறங்க- அவன் பின்தொடர – நானும், நதிராவும் நெருங்க – குறுந்தாடி மிரட்ட – பெரிய பொட்டு கொலை செய்ய – நான் மாட்டிக்கொள்ள – கடைசியில் கதை சுபத்தை நெருங்கிக்கொண்டிருப்பது புரிந்தது.

அந்த சந்தோஷ நிமிடத்தில் –

வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

## 12

அந்த காரின் சத்தம் என்னை பயமுறுத்தியது.

ஏதோ ஒரு ஆபத்து என்னை நோக்கி வருகிறதோ என்று இதயம் நடுங்கியது.

என் கண்கள் மட்டுமல்ல –

அத்தனை கண்களும் வாசலில் பதிந்திருந்தன.

காலடி ஓசைகள் நெருங்கின.

தொடர்ந்து வாசலில் முகங்கள் தெரிந்தன.

அட... எங்கள் கம்பெனி நிர்வாக இயக்குநர் சுந்தரேசன் வந்துகொண்டிருந்தார்.

அவர் பின்னால் விசித்ராவும் உள்ளே நுழைந்தாள்.

'என்னை தெரியாது என்று சொன்னவள் எதற்காக உள்ளே வருகிறாள்...?'

முகத்துக்கு முகம் வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

என்னை அழைத்துக்கொண்டு வெளியே வந்தார்கள்.

ஒரே ஒரு முறை திரும்பி நீபாவைப் பார்த்தேன்.

அந்தக் கண்களில்... அந்தக் கண்களில்...

அமைதியாய் காரில் ஏறினேன்.



"எங்கே போக வேண்டும்...?"

– என்று கேட்டார், நிர்வாக இயக்குநர்.

"ஓட்டலுக்கு..."

– என்றேன் அவசரமாய்.

சென்னையில் எனக்கு இருந்த அலுவலக வேலைகளை அவசர அவசரமாய் முடித்தேன்.

இடையில் விசித்ரா பக்கம் திரும்பவே இல்லை.

வேலைகள் முடிந்ததும் நிர்வாக இயக்குநரிடம் விடைபெறச் சென்றேன்.

அவர் இண்டர்காமில் விசித்ராவை அழைத்தார்.

விசித்ரா ஒயிலாக உள்ளே நுழைந்து– என் முன்னால் நின்றாள்.

"விசித்ரா... காரில் எழும்பூர் ஸ்டேஷனில் விஜயகுமாரை விட்டுட்டு வா."

– கட்டளையாய் வந்தன வார்த்தைகள்.

அவள் சந்தோஷமாய் தலையாட்டினாள்.

'ஒரே காரில் விசித்ராவுடனா... அந்த எட்டப்ப துரோகியுடனா?'

– அவசரமாய் மறுத்தேன்.

"வேண்டாம் சார். நான் ஆட்டோவில் போய்க்கிறேன்."

அவரோ வற்புறுத்தினார்.

அரை மனதுடன் தலை அசைத்துவிட்டு வெளியே வந்தேன்.

கார் காத்திருந்தது.

நானும், விசித்ராவும் பின் இருக்கையில் ஏறிக்கொள்ள –

கார் குலுக்கல் எதுவும் இல்லாமல் இதமாக புறப்பட்டது.

இரண்டு பேருக்கும் இடையில் இடைவெளி அதிகமாய் இருக்கும்படி பார்த்துக்கொண்டேன்.

அவளுடைய முகபாவனை–

என்னிடம் பேச முயற்சிப்பது போலிருந்தது.

நான் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டேன்.

இறங்கும் வரை இருவரும் ஒரு வார்த்தை பேசவில்லை.

எழும்பூர் ரெயில் நிலையம் வந்ததும் இருவரும் இறங்கிக்கொண்டோம்.

கம்பெனி காரை திருப்பி அனுப்பிவிட்டாள்.

நான் மவுனமாய் உள்ளே நடந்தேன்.

அவளும் பின்தொடர்ந்தாள்.

கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரெயில் காத்து நின்றது.

அவசரமாய் அதில் ஏறிக்கொண்டேன்.

விசித்ராவை திரும்பிக்கூட பார்க்கவில்லை.

ஜன்னலோர இருக்கை.

அமர்ந்து வெளியே எட்டிப் பார்த்தேன்.

சோகமாய் விசித்ரா நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

தயக்கத்துடன் நடந்து அருகில் வந்தாள்.

கண்கள் கலங்க–

பேச ஆரம்பித்தாள் உடைந்த குரலில்.

"விஜய்... சின்ன வயசிலிருந்தே போலீஸ்னா எனக்கு பயம். அதனாலதான் அவசரமாய் தெரியாதுன்னு பொய் சொன்னேன். என்னை மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்க விஜய்... நான் உடனே விஷயத்தைச் சொல்லி வேக வேகமாய் மேனேஜிங் டைரக்டரை அழைச்சிட்டு ஸ்டேஷனுக்கு வரலியா...? என்னை மன்னிச்சேன்னு ஒரு தடவை சொல்லுங்க விஜய்... பிளீஸ் சொல்லுங்க விஜய்."

– நான் தரை பார்த்தபடி பேசாமல் இருந்தேன்.

ரெயில் மெல்ல நகர ஆரம்பித்தது.

விசித்ரா கண்களில் கண்ணீர் திரையிட்டது.

ரெயில் நகர்ந்தது.

என் இதயம் இளகியது.

"மன்னிச்சிட்டேன் விசித்ரா... போதுமா?"

– என்றவன் வலது கையை நீட்டி செல்லமாய் அவள் கன்னத்தில் தட்டினேன்.

தட்டிய என் கையைப் பிடித்து 'பசக்' என்று ஒரு முத்தம் தந்தாள்.

ரெயில் வேகமெடுக்க– சந்தோஷமாய் கை அசைத்தாள்.

நான் வலது கையை நெஞ்சோடு வைத்துக்கொண்டு இடது கையை அசைத்தேன்.

தோளில் சின்ன 'பேக்'குடன் அவசர அவசரமாய் ரெயிலில் ஓடிவந்து ஏறிய– 'டீன் ஏஜ்' சல்வார் கம்மீஸ் பெண் இடம் தேடி– என் அருகே வந்து அமர்ந்தாள்.

எனக்குள் மீண்டும் காதல் தீ!

**(முற்றும்)**



# அறிவுப் போட்டி – 578

## 3 பேருக்கு தலா ரூ.333 பரிசு

'ராணிமுத்து' அறிவுப்போட்டி 578–ல் 3 பேர் சரியான விடை எழுதி இருந்தார்கள். பரிசுத்தொகை ரூ. 1000, ஆளுக்கு ரூ.333 விதம் வழங்கப்படுகிறது.

சரியான விடை : **(1) கம்பு, (2) இனிப்பு, (3) தொண்டர், (4) நீர், (5) வெள்ளம், (6) மரம், (7) பரவும், (8) பாதுகாப்பு, (9) கவை, (10) கூட்டம், (11) பனை, (12) கோள்.**

பரிசு பெற்றவர்கள்: (1) ஆர்.அம்பிகா, மதுரை. (2) இ.தெய்வநிலா, கோவை. (3) பா. ஜெகராஜன், கடலூர்.

# அறிவுப் போட்டி – 579

## 3 பேருக்கு தலா ரூ.333 பரிசு

'ராணிமுத்து' அறிவுப்போட்டி 579–ல் 3 பேர் சரியான விடை எழுதி இருந்தார்கள். பரிசுத்தொகை ரூ. 1000, ஆளுக்கு ரூ.333 விதம் வழங்கப்படுகிறது.

சரியான விடை : **(1) பூமாலை, (2) விளக்கு, (3) பிரச்சினை, (4) வெற்றி–தோல்வி, (5) மாமியார், (6) முனிவர், (7) மனம், (8) தீர்வு, (9) மிளகு, (10) கடன், (11) கைப்பந்து, (12) பங்குச்சந்தை.**

பரிசு பெற்றவர்கள்: (1) கா.சரசு, ஊமையம்பட்டி. (2) எஸ்.எச். முகம்மது, சென்னை. (3) கு.முல்லை, பண்ருட்டி.

# ஸ்காண்டிநேவிய நாடுகள்

**சுவீடன், டென்மார்க், நார்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் 'ஸ்காண்டிநேவிய நாடுகள்' என்று அழைக்கப்படுகின்றன.**